அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

Page No. 469.

மலர் 4 இதழ் 10 விலை அ. 4	நந்தன ஸு தை மீ ஜனவரி—பிப்ரவரி—1953	வருட சந்தா ரு. 2-4-0

ACC. NO. 18581.



தாருகாவனத்து முனிவர்கள் மோகினியைக் கண்டு பின்தொடர்ந்து சென்ருர்கள்

(கந்தபுராணச் சித்திர விளக்கம்—44)

பொருளடக்கம்

			பக்கம்
1.	திருப்பாவை	(திருப்புகழ் மணி) ...	433
2.	ஆத்ம போதம்	(நா. பிச்சுமணி, கி. சுப்ரமணியன்) ...	434
3.	கீதையின் சாரம்	(K. S. சுந்தரமூர்த்தி) ...	439
4.	திருமுறைகளின் பெருமை	(தென்னாப்பிரிகா ச. மு. பிள்ளை) ...	445
5.	பகழிக் கூத்தர்	(ரசபதி) ...	448
6.	வேலவரும் தமிழும்	(ஸ்ரீ வத்ஸன்) ...	455
7.	அதிசயம் அநேகமுற்ற பழநி	(சே. த. இராமலிங்கம் பிள்ளை) ...	459
8.	கதிர்காம யாத்திரை	(கி. வா. ஜகந்நாதன்) ...	470
9.	Music, the medium of mukti	(Thiruppugal Mani) ...	478

'அமிர்தவசனி' சந்தா அறிக்கை

சித்திரைமீ முதல் பங்குனிமீ முடிய வருட சந்தா உள்நாட்டிற்கு இலங்கை உள்பட, ரூ 2—4—0. நான்கு வருட சந்தா ரூ. 8—4—0 அயல்நாடுகளுக்கு வருட சந்தா ரூ 3—0—0. நான்கு வருட சந்தா ரூ. 11—0—0.

பத்திரிகையை வி.பீயில் அனுப்புகிறதில்லை. சந்தாவை சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே அனுப்பி வைக்கவும்.

அமிர்தவசனி, 54, பந்தர் தெரு, சென்னை.

For **PAPERS** INDIAN & FOREIGN

NEWSPRINT — CREAMLAID — PRINTING BOND — TISSUE — BUTTER — POSTER — ART KRAFT — BOARDS, ETC., ETC.,

Deccan Blue Match, Tea wrapper & Duplicating paper available any quantity

P. S. N. M. Ramalingam Chettiar & Co.

46, ANDERSON STREET, MADRAS-1

PHONE: 55004 - POST BOX 1563 - GRAMS: "DRAWING"

அமிர்தவசனி
தெய்வீக மாதப்பத்திரிகை.

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

மலர் 4	நந்தன ஞு தை மீ ஜனவரி—பிப்ரவரி—1953	இதழ் 10

திருப்பாவை
கண்ணனா கந்தனா!

திருப்புகழ்மணி

திருப்பாவையை நாடெங்கும் புகழ்ந்து பூஜிக்கின்றார்கள் நன்மக்கள். ஆண்டாளான தவத்துக் கரசி, தன் அனுபூதியையல்லவோ கொட்டிவிட்டாள். வேலனைக் காண வேல் விழியார்கள் கூடி நீராடி பூஜிக்கச் செல்கின்றார்களாம். கண்ணனை, கூர்வேல் கொடுந்தொழிலன், நந்தகோபன் குமரன், ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம், கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான் என்றெல்லாம் வகுத்தாள். வேல்பிடித்த கையன் ஆனந்த பசுபதி குமாரன்; ஊனேறு வேலின் உருவேறு கண்ணி பராசக்தி புத்ரன்; சந்திரமண்டலம் அனைய முகத்தான். இந்த உருவம் முருகன் உருவம். ஆமாம்! கண்ணனும் கந்தனும் ஒருவரே யன்றி

காட்சியெல்லாங் கண்ணைவிடக் கண்டதுண்டோ யாதினுக்கும்
ஆட்சி உனதருளே அன்றோ பராபரமே.

வேறில்லை. இது ஆண்டாள் உபதேசம். இங்ஙனம் கண்ணனைப் போற்றுகின்றாள் அன்னை.

அன்று உலகம் அளந்தாய் அடிபோற்றி'

வென்றுபகை கெடுக்கும் நின்கையில் வேல் போற்றி' என்று பாடிய கருத்துதான் என்னே! கண்ணன் சங்கு சக்கரமும், ஆண்டாள் கண்முன் வேலாய்த் தோற்றம் அளித்தனவோதான்.

முருகனைக் கண்ட கண்கள், கண்ணனையும் கண்டனவே என்றாள்போலும். பசுபதி முக்கண்ணன்; கண்ணன், க்ருஷ்ணன், செந்தாமரைக் கண்ணன், புண்டரீகாக்ஷன், இருகண்ணன்; முருகனே பன்னிரு கண்ணன். எல்லாத் தெய்வங்களும் கண்ணன் போலும். சமயாதீதப் பொருளை சமயம் பார்த்துக் கூடிவிட்டாள் ஸ்ரீ ஆண்டாள். அம்மை யாரை அடிமை கொண்டால், அவனோடு யார்தான் கூடமுடியாது. மானிடரைப் பேதம் செய்ய வேண்டாம் என்றால், தெய்வத்தையா பேதம் செய்வது? யாவரிடத்திலும் உள்ளவன், கண்ணில் உறையும் ஜோதியான கண்ணனே கந்தனே!

ஆத்மபோதம்

(நா. பிச்சுமணி. கி. சுப்பிரமணியன் மடுங்கா)

(409 - ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்குள் சற்றுத் தைர்யமடைந்த நான் கேட்கலுற்றேன். 'தாயே! உலகமே மாயை. ஆண்டவன் ஒருவனைத் தவிர மற்றவை எல்லாம் நிலையில்லாதவை. பொய்எனில்,

---

எட்டுத் திசையுமொன்றாய் இன்பமாய் நின்றவுன்னை
விட்டுப் பிரியவிடம் வேறே பராபரமே.

நாம் தினந்தோறும் கண்ணால் கண்டும், ஐம்புலன்களால் உணர்ந்தும் நிகழ்ந்துவரும் இவ் உலக விவகாரங்கள் எல்லாமே, பொய்யென எவ்விதம் துணிந்து கூற முடியும்? அவ்விதமேயிருந்தால், இவற்றின் உண்மை ஸ்வரூபம்தான் என்ன? அன்றாட வாழ்க்கையில் பல்வேறு அல்லல்களால் அவதிப்படும் நாம் யார்? ஏன் இவ்விதம் அல்லலுறுகிறோம்? எத்தனை தரம் புலம்பினாலும், பூரணன் அருள் கிட்டாதது ஏன்?' என்றுரைத்த என்னைப் பார்த்து நகைத்தவாறே,

'அன்பனே! உலகிலுள்ள ஒவ்வொரு ஜீவனும் உண்மையில் பரமாத்ம ஸ்வரூபமே. அவனைத் தத்காலீகமாகப் பீடிப்பதுபோல் தோன்றி மறையும் துக்க ஸங்கடங்கள், கனவில் காண்பவைபோல் உண்மையில் நிலைத்திருப்பவை யல்ல. அவை சரீரத்தைப் பாதிக்குமே யல்லாது, சுத்த நிர்மலமாய், ஸர்வ வ்யாபியாய் உள்ள ஆத்மாவைப் பாதியாது. இதை ஒருமனிதன் உள்ளத்தில் உள்ளவாறு உணர்ந்து கொள்வானேல், சுகதுக்கங்களான மாயா விநோத ஜாலங்களும், மனிதனை மேலும் மேலும் ஸம்ஸாரிக ஸமுத்திரத்தில் ஆழ்த்தி அமுக்கும் தருணத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கும் பெண்ணாசை பொன்னாசைகளாய துஷ்ட ஜந்துக்களும் அவனை இழுக்கும் வலிமையுடையவை யாகா. தன் உண்மை நிலையை அறிந்தவனை மலாவரண விக்ஷேபாதி மும்மலங்களும் அணுகா. உண்மையிலேயே ஆனந்தத்திலேயே உண்டாகி ஸமஸ்த மங்கள காரகனாய், ஸர்வஜீவ வ்யாபகனாய், நித்யனாய், நிர்மல நிஷ்களங்கனாய், அணுவுக்கணு, அண்டத்துக் கண்ட

பிறியா துயிர்க்குயிராய்ப் பின்னமற வோங்குஞ்
செறிவே அறிவே சிவமே பராபரமே.

மாய், ஸத்யோஜாதாதி குண ஸம்பன்னனாய், அயோநிஜனாய், ஆதிமத்தியாந்த ரஹிதனாய் உள்ள ஸர்வேஸ்வரனை அறிந்துகொண்டு எவனொருவன் தன்னிடத்தில் பிறரையும்,பிறரிடத்தில் தன்னையும்காண்கிறானோ,அன்பான விதை ஊன்றி, அறிவான தண்ணீர் வார்த்து, ஷட்ரிபுக்களான காம, க்ரோத, லோப, மோஹ, மத, மாத்ஸர்யாதிகளைப் பிடுங்கி, வைராக்கியமான நாற்று நட்டு, அருளான மழை பொழிய, உறுதி, தைர்யம் என்னும் கால்வாய்கள் நடுவே பக்தி யென்னும் நீர்பாய்ச்சி, அறிவென்னும் போர்க்களத்திலே எஞ்சிநிற்கும் ஆணவமான வைக்கோலை நீக்கி, முக்தி என்னும் பயிர் விளைவித்து, பேரானந்த நிலையான நிர்விகல்ப ஸமாதியில் எவனொருவன் ஆனந்தத் தேனை அள்ளிப் பருகுகிறானோ, அவனே தன்மயத்தை அடைந்தவன். அவனே ஜீவன் முக்தன். பிறப் பிறப்புகள் அவனுக்குக் கிடையா. சுகதுக்கங்கள் அவனைச் சாரா. இவ்விதம் தானே பலவாக நின்று, தன்னையே தன்னிடமிருந்து பிரித்துக் கொண்டு, பின் தன்னைத்தானே உணர்ந்துகொள்கிறோமா என்று சோதனை செய்து கொள்வதான இந்த வேடிக்கையே ஆண்டவனின் விளையாட்டும். இந்நிலையை அடைவதே மனிதனின் உண்மைக் கொள்கையும். இதை விட்டு அவன் எங்கு சென்றாலும், விளையாட்டுக் காலங்களில் எங்கேனும் ஓடித் திரிந்து, உடல்களைத்து, உடம்பெல்லாம் புழுதி படிந்து, பசிக்கும் வேளையில் தாயைத்தேடி ஓடிச் செல்லும் பச்சிளங் குழந்தையேபோல்,சுற்றிச்சுற்றி அவன் காலடியிலேயே தேம்பித் தேம்பி அழவேண்டும். பக்தி பரவசத்தால் அவனைக் காண ஏங்கி அழுபவருக்கே அவன்

ஏதேது சொன்னாலும் எள்ளளவும் நீயிரங்காச்
சூதே தெனக்குளவு சொல்லாய் பராபரமே.

காட்சி அளிப்பான். அழும்போது அணைக்கும் அன்னையும் அவனே. தவறும்போது தண்டிப்பதுபோல் தண்டித்துத் தடுத்தாட்கொள்ளும் தயைமிக்க தந்தையும் அவனே. அறிவுகெட்டு, மதிமயங்கி, நிலைதடுமாறி என் செய்வதென்று கலங்குங் காலையில் குருவாய்வந்து, ஞான வாசல்திறந்து, விவேகமான தீபத்தை ஏற்றி வைப்பவனும் அவனே. எளியார்க் கெளியனாய், எல்லாவற்றிலும் தானாய், வல்லார்க்கு வல்லனாய் இருந்து இத்தனை சித்துக்கள் புரிந்து வாழ்க்கைப் பாதையில் நம்மைத் திக்குமுக்காடச் செய்து வேடிக்கை பார்க்கும் மாயாவினோத ஜகஜ்ஜாலனு மவனே!

வீணையின் இனிமையான நாதத்திலே, பார்த்தோர் பரவசப்படும் பச்சிளங் குழந்தையின் மழலை மொழிகளிலே, வயல்வெளிகளில் படர்ந்து வளர்ந்திருக்கும் புற்களின் பசுமையிலே, ஆண்டவன் அஸ்தித்வத்தைப் பறையறைந்து அனைவரையும் விழிப்புறச்செய்வது போன்ற கோயில்மணி களின் நாதப்ரும்மத்தின் இன்ப லாகிரியிலே, சரத்காலச் சந்திரனை வெட்கமுறச் செய்யும் தூய்மையே உருக் கொண்டு வெண்மை நிறமுடையதாகி, மலையேதான் உருண்டு விழுகிறதோஎன்ற ப்ரமிப்பைத்தரும் நீர்வீழ்ச்சி யில் பாயும் நீரோட்டத்தின் ஓங்கார ஒலியிலே, வேய்ங் குழலின் இனிய நாதத்திலே, தமிழனின் இனிமையிலே, கவிகளின் கனம்மிக்க சொற்களிலே, அலைகளான கைகளை உயரத்தூக்கி, நம்மை வா வா என்று ஓலமிட்டழைத்து, கரைமோதும் அலைத் தண்ணீராலேயே மாந்தர் பாதம் கழுவி, வரவேற்றுபசரித்து, இத்துணை பரந்து விசாலமான தாய், ஆழமோ கரையோ காணமுடியாததாய், இத்

கற்பனையாப் பாடுகின்றேன் கண்ணீருங் கம்பலையுஞ்
சொற்பனத்துங் கானேனென் சொல்வேன் பராபரமே.

தன்மையது, இவ்வளவுடையது என யாராலும் மதிப்பிட்டுக் கூறமுடியா மகிமையுடைய என்னைப் பார்த்த பின்னும், என்னையும் படைத்த ஐயனின் மகிமையிலும், கருணையிலும் உங்களுக்கு சந்தேகமுண்டாகிறதா, பாருங்கள்! பாருங்கள் என அறை கூவி அழைப்பதுபோன்ற அலைகளின் பயங்கர ஓசையிலே, இனிய தென்றலின் குளிர்ச்சியிலே, எரிமலையின் உஷ்ணத்திலே, மலரின் மணத்திலே, பெண்டிரின் உள்ளத்திலே, மாந்தரின் மாண்பிலே, தாமரையின் சிகப்பிலே, காகத்தின் நீலநிறத்திலே, ஞானிகளின் குளிர்ந்த பார்வையிலே, புள்ளினங்களின் மருட்சியிலே, ஆகாயத்தில் விசாலமாய்ப் படர்ந்திருக்கும் நீர்கொண்ட கார்மேகக் கூட்டங்களின் கருமையிலே, குயிலினிய குரலிலே, கதிரவனின் எழில்மிக்க கதிர்களிலே, மனதின் வேகத்திலே, கனவின் காட்சிகளிலே, பெரியோரின் பாத தூளிகளிலே, தாயின் அன்பிலே, அனைத்திலும் எங்குமாய், எல்லாமாய், நிர்மலமாய், நிறைந்திருப்பவனும் நாம ரூபமற்ற அக்கருணை மூர்த்தியே!'

என்று கூறி மூச்சுக்கூட விடாமல் பேசியதால் சற்றே திகைத்து சிறிது ஒய்வெடுத்துக் கொள்ளுமாப்போல் ஒரு கணம் நின்றது. நானே ஆச்சர்யத்திலும், ஆனந்தத்திலும் மூழ்கியவனாய், பொருள் பொதிந்த சமுத்திரம்போல் ஆழமோ, கரையோ காணமுடியாததும், கம்பீரமானதும், உண்மையானதும், வாக்ஸாமர்த்யம் செறிந்ததுமான அதன் வார்த்தைகளில் மெய்ம்மறந்து, பல நுண்ணிய விஷயங்களை மேலும் தெரிந்துகொள்ளும் ஆவலுடன், சாதக பட்சி ஆகாயத்திலுள்ள கார்மேகக் கூட்டங்களுக்கு ஏங்கு

வன்பொன்று நீங்கா மனதிறப்ப மாருப்பேர்
அன்பொன்றும் போதும்எனக் கையா பராபரமே.

மாப்போல், சகோரபக்ஷி அமுதம் நிறைந்த திங்களை நினைந்து நினைந்து உருகுமாப்போல் சிலையின் முகத்தையே ஆவலுடன் பார்த்தவனாக செயலற்று நின்றேன்.

மீண்டும் சிலை பேசலுற்றது.

(தொடரும்)

கீதையின் சாரம்

K. S. சுந்தரமூர்த்தி, புவனகிரி

(430-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாரதப் போர் மூண்டது. இருபுறமும் இரு திறத்தாருடைய சேனைகள் அணிவகுத்து நின்றன. காண்டீபனுக்குக் கண்ணன் வாக்களித்த பிரகாரம், சாரதியாய்த் தேர் செலுத்தி வருகிறான்.

பார்த்திபன் :—கண்ணா! எதிரே தெரிகின்ற துரியோதனனுடைய சேனைகளை நன்றாகப் பார்த்தேன். நீ சொல்லிய துச்சாதனனும், சகுனியும் கர்ணனுமாகிய மூவரும் என்னோடு போர் செய்ய வந்திருப்பதையும் பார்த்தேன். அவர்களோடு, எனது குருவாகிய துரோணரும், கிருபரும், தாத்தா பீஷ்மரும், இக் கொடியோனுக்கு சகாயமாக வந்த ஏனைய தேசாதிபதிகளாகிய இவர்கள் அனைவரையும் பார்த்தேன். அதோடு இவர்கள் தங்கள் தங்கள் நாட்டுக்குரிய இன்ப நலன்களை இழந்து நம்மால் இந்த போர்க்களத்தில் மரணமடைவார்கள் என்பதையும் என்னுடைய மனக் கண்ணால் கண்டேன். இவர்கள் இறப்பதால் இவர்களால் இந்நாள் வரையில் காக்கப்பட்டு

ஏதுந் தெரியா எளியேனை வாவெனநின்
போதநிலை காட்டிற் பொருதோ பராபரமே.

வந்த பல நாட்டு மக்களும் துன்புறுவதையும் என் மனக் கண்ணால் காண்கிறேன். போரில் மாண்ட தன் கணவரை இழந்த மாதர்களும், மைந்தரை இழந்த தாய்களும், தந்தையை இழந்த குழந்தைகளும் படும் துன்பங்களையும் கண்டேன். இதனால் என்னுடைய சுற்றத்தார்களான, பங்காளிகளான துரியோதனாதியர்களையும், எனது அன்பிற்குரிய நண்பர்களான பல நாட்டு வேந்தர்களையும், மக்களையும், யானைகளையும், குதிரைகளையும், வீரர்களையும் கொன்று அவர்களுடைய ரத்த வெள்ளத்தில் எழுகின்ற சூனியத்தையும், அதில் எங்களுடைய பயனில்லாத வெற்றியையும் அதில் இன்பமில்லாத சுகத்தையும், மகிழ்ச்சி யில்லாத வாழ்வுமாகிய ஓர் நரகக் காட்சியையும் என் மனக் கண்ணால் காண்கிறேன்.

கண்ணா! இதையெல்லாம் காணும்போது எனக்கு ஒரே பயமாக இருக்கிறது. இந்த மாதிரி பயங்கரக் காட்சியை நான் இதுவரையில் செய்த போர்களில் கண்டதில்லை. இன்று நான் காணும் சூனியத்தை இது வரையில் என் வாழ்நாளிலே ஒரு தடவைகூட கண்டதில்லை. கண்ணா! இவர்களை நான் அழித்து விட்டால், இதனால் எனக்கு கிடைக்கக் கூடிய நன்மைதான் என்ன? இப் போரில் யுத்தம் செய்து அவர்களை அழித்த பிறகு நான் காணப் போவது வெற்றியல்ல. வெறியாட்டத்தின் விளைவு தான் காண்பேன். என்னுடைய சுற்றத்தாரான இக் கூட்டத்தை அழித்தால் எனக்குக் கிடைப்பது சந்தோஷமல்ல. துக்கம்தான். துக்கக் கோட்டையில் எழும்பிய வெறும் கண்ணீரைத் தான் காண்பேன். ஆகையால்,

---

ஓராமல் எல்லாம் ஒழிந்தேற்குன் தெய்வவருள்
தாரா திருக்கத் தகுமோ பராபரமே.

கண்ணா! எனக்கு இவ்வரசும் வேண்டாம். இதனால் கிடைக்கக்கூடிய துன்ப வாழ்வும் வேண்டாம். எல்லோரையும் கொன்று[1] விட்டு நான் அரசாளுவதைவிட, இன்றே இப்போதே காட்டிற்குத் திரும்பவும் சென்று தவமிருந்து இறைவனை அடைவேன். அரியோதனனே இந்த நாட்டை ஆளட்டும். அவன் இராஜவுடை தரித்து நாடாளட்டும். நான் மர ஆடை தரித்து காடு செல்கிறேன். நான் இந்த இடத்தில் இனி ஒரு கணமும் நில்லேன். எனக்கு இந்தப் போரை நினைத்தாலே ஒரே பயமாக இருக்கிறது. இந்த ஞாய விரோதமான போர் வேண்டாம் என்று காண்டீபத்தை கீழே வைத்தான் பார்த்திபன்.

கண்ணன்:—காண்டீபா! நான் இதுவரையில் கேட்டுக் கொண்டு வந்ததெல்லாம் பஞ்ச பாண்டவர்களில் ஒருத்தனான குந்தி தேவியின் புதல்வன் அருச்சுனன் பேச்சையா? தன் எதிரே எத்தனை வில் வீரர்களிருந்தாலும், தான் ஒருவனே அவர்கள் வில்லுக்கு எதிர் நின்று யுத்தம் செய்து வெற்றி கண்ட தனஞ்சயனுடைய வார்த்தையையா நான் இது வரையில் கேட்டு வந்தது? கௌரவர்களுடைய சபையில் பாஞ்சாலியின் உடையைப் பற்றி இழுக்கும்போது, அந்த சபையில் தங்களைக் கேலி செய்த காணனை தன்னுடைய வில்லினால் கொன்று வெற்றி மாலை சூடுவேன் என்று சொல்லிய விஜயனுடைய வார்த்தையையா நான் இது வரையில் கேட்டு வந்தது. கேவலம் உனக்கு இந்த சமயத்தில் இந்த ஏழை புத்தி எங்கிருந்து வந்தது அருச்சுனா? நீ நடத்த வேண்டிய இந்த போரையே ஞாய விரோதமான போர் என்றாயே? ஞாய விரோத

---

[1] மோனந் தருஞான மூட்டி எனக்குவட்டா
ஆனந்த வாழ்க்கை அருளாய் பராபரமே.

மென்றால், தருமத்திற்கு விரோதமாக நடந்தாலல்லவோ நீ சொன்னது உண்மை. நீ நடத்தும் இந்தப் போர் தருமப் போரல்லவா?

காண்டீபா! வயலில் நெல் வளர்வதற்கு இடைஞ்சலாகத் தோன்றும் புல்லைக் களை யெடுப்பது குற்றமாகுமா? தான் ஆளும் அரசில் மனிதர்களுக்கு இடைஞ்சலாக காட்டில் வாழும் விலங்குகள், நாட்டில் புகுந்து மக்களின் உழைப்பால் வளரும் பயிர்களை அழித்தால், அவைகளைக் கொன்று மக்களுடைய பயத்தைப் போக்குவது அந்த நாட்டை ஆளும் அரசனுடைய கடமை யல்லவா? அவன் அவ்வாறு தன்னுடைய கடமையை நன்றாக உணர்ந்து, அதன்படி மக்களுடைய பயிரை அழிக்கும் அக்கொடிய விலங்குகளைக் கொன்றால் அது குற்றமாகுமா? அது போல், சுற்றத்தார்களான உங்களையும், நாட்டு மக்களையும் இந்நாள் வரையில் துன்புறுத்தி வந்த இக்கொடியோர் கூட்டத்தை அழித்து, அதர்மத்தையே தொழிலாகக் கொண்ட இந்த எதிரிகளை அழித்து, தருமத்தை நிலை நாட்ட வேண்டியது அரசனான உன்னுடைய கடமை யல்லவா? நீ யார்? க்ஷத்திரிய னல்லவா? ஒரு க்ஷத்திரிய னுடைய பேச்சிலா பயம் என்ற சொல் வெளிவரும்? போருக்கு முன் நின்று சண்டை செய்யாமல் புறமுதுகு காட்டி ஓடுவானோ க்ஷத்திரியன்? நீ இச்சமயத்தில் இந்தப் போர்க் களத்தை விட்டு, இத் தேரிலிருந்து இறங்கிச் செல்வாயே யானால், உன்னை அந்த துரியோதனர் கூட்டம் சண்டைக்குப் பயந்து ஓடுகிறான் என்றல்லவா சொல்லிக் கேலி செய்வர்? உன்னுடைய க்ஷத்திரியத்திற்கு இது

வாடுமுகங் கண்டென்னை வாடாம லேகாத்த
நீடுங் கருணை நிறைவே பராபரமே.

ஒக்குமா? நீ சரிவர கற்கவேண்டிய நூல்களைக் கற்று உணர வேண்டியவைகளை நன்றாக உணர்ந்திருப்பாயே யானால், இந்த வார்த்தையை உன்னிடமிருந்து நான் கேட்டிருக்க நேரிடாது குறைகுடம் போன்றவன் நீ. நிறைகுடம் போன்றவன் என்றால், இவ்வார்த்தை உன்னிடமிருந்து வராது? குறைகுடம் ஆனதினால்தான், தண்ணீர் தளும்புவது போன்று உன்னிடமிருந்து இச்சொல் வெளிவருகிறது. பேதமை கொண்டாய் காண்டீபா! நன்றாக கற்கவேண்டிய நூல்களைக் கற்று, உணர வேண்டியவைகளை உணர்ந்தவர்கள், தங்களுடைய சுற்றத்தார்கள் இறப்பதைப்பற்றி தாங்கள் ஒரு போதும் வருந்த மாட்டார்கள். நீ குறைகுடம் போன்றவனாதலால்தான் மீளா நரகத் துன்பமுண்டாகுமென்று மயங்கிக் கூறினை. இது பேதமை. ஆதலால், உனது அச்சத்தை ஒழி. அக்கொடியோர் கூட்டத்தை உன் வில்லினால் அழிப்பாயாக என்று, யசோதை மைந்தன் கண்ணன் காண்டீபனிடத்தில் கூறினான்.

பார்த்திபன்:—நன்று சொன்னாய் கண்ணா! நீ சொல்லிய அந்த கற்றுணர்ந்த பெரியோர்களான அறிஞர்கள், மரணம் வந்தால் தாங்கள் கலங்கார்களோ? அப்படி அவர்கள் கலங்க மாட்டார்கள் என்றால், அதுபோல் நானும் கலங்காமல், அவர்கள்போல் அறிவிழந்த லாகிய சோகத்தை யடையாது இருக்க, தக்க வழியை எனக்கு நீ சொல்வாயாக!

கண்ணன்:—தனஞ்சயா! நல்லது சொல்கிறேன். அறிந்து கொள். நீயும் நானும், இதோ எதிரே தெரிகின்ற

புந்தியினுல் நின்னடியைப் போற்றுகின்ற மெய்யடியார்
சிந்தை யிறப்போநின் தியானம் பராபரமே.

வேர்தரும், மற்று யாவரும் உண்மை ஞானத்தால் ஆராயுமிடத்து, பிறந்து இறப்பது, (உற்பத்தியாகி நாசத்தை யடைவது) கிடையாது.

பார்த்திபன்:—கண்ணா! இந்த உலகத்தில் நீயும், நானும் மற்று இங்குள்ள யாவரும் பிறந்து, இறப்பதில்லை யென்றால், பின் யார்தான் இவ்வுலகில் பிறந்து இறத்தல் முதலானவை உடையவர் யென்பதை நிச்சயமாக, உறுதி யாக எனக்குச் சொல்?-

கண்ணன்:—காண்டீபா! இந்த உலகில் தோன்றி மறைவது கன்ம பலனை அனுபவிப்பதற்காக எடுத்த இவ் வுடல்தான். தோன்றி மறைவது இவ்வுடலுக்குப் பொருந் திய இயற்கை. ஆனால், நித்தியமாகிய ஆன்மாவிற்கு தோன்றி மறையும் தன்மையில்லை. அந்த ஆன்ம சொரு பமே நீ. நீ என்றும் இறப்பதுவும் இல்லை, பிறப்பது வும் இல்லை. ஆகையால் உனக்கு என்றும் அழிவில்லை.

பார்த்திபன்:—கண்ணா! இத்தனை நாள் வரையில் தேகத்தையும், பிராணனையும், ஞானேந்திரியம், கன்மேந் திரியங்களையுமே நான் என்று கண்டேனே யன்றி, இவை இல்லாத வேறொன்று இருக்குமென்று நான் காணவில்லை. அதுதான் நானென்றால், அதைத் தாங்கள் அடியேன் பொருட்டு நன்றாக உணர்த்தியருள வேண்டும்.

கண்ணன்.—அப்படிக் கேட்ட பார்த்திபனுக்கு கண்ணன், போர்க் களத்தில் பிறருக்குத் தெரியாமல் இரகசியமாக, அருச்சுனா! தேகத்தையும், பிராணனையும், ஞானேந்திரியம், கன்மேந்திரியங்களும் ஆகிய இவை களையே நீ யென்று இத்தனை காலமாக எண்ணி யிருந் தது தவறு. கேள்! (தொடரும்)

உனக்குவமை யாக்கருணை உள்ளவரும் வன்மைக்
கெனக்குவமை யானவரும் இல்லை பராபரமே.

திருமுறைகளின் பெருமை

(தென்னுப்பிரிகாடர்பன் திரு ச. மு. பிள்ளை அவர்கள்)

சிவபிரானுரைத் துதித்துச் சுத்தாத்துவித சைவ சித்தாந்த சமயாசாரிய சுவாமிகளாகிய திருஞான சம்பந்தர் முதலிய சைவத் திருவாளர்களால் அருளிச் செய்யப்பெற்ற தேவாரம், திருவாசகம், திருக்கோவை, திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், திருமுகப் பாசுரம் முதலிய நாற்பது பதிகங்கள், திருத்தொண்டர் பெரிய புராணம் என்னும் அருள்நெறி நூல்களே திருமுறை என்னும் நாமத்தால் வழங்கப்படுவன. இத்திருமுறைகள் பன்னிரு பிரிவின.

அவை, ஆளுடைய பிள்ளையார் தேவாரம் முதன் மூன்று திருமுறைகளாயது. ஆளுடைய அரசர் தேவாரம் நான்கு, ஐந்து, ஆறும் திருமுறைகளாயது. ஆளுடைய நம்பி தேவாரம் ஏழாம் திருமுறையாயது; ஆக தேவாரத் திருப்பதிகங்கள் ஏழு திருமுறைகளாயின. ஆளுடைய அடிகள் திருவாசகம், திருக்கோவை எட்டாந் திருமுறை. திருமாளிகைத் தேவர் முதலாய ஒன்பதின்மர் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஒன்பதாந் திருமுறை. திருமூலனார் திருமந்திரம் பத்தாந் திருமுறை. திருவாலவா யுடையார் திருமுகப் பாசுரம் முதலிய நாற்பது பதிகங்கள் பதினொராந் திருமுறை. சேக்கிழார் திருத்தொண்டர் பெரிய புராணம் பன்னிரண்டாந் திருமுறை.

இப்பன்னிரு திருமுறைகளுள், முன்னேய பதினொன்றையும் வகுத்த பெரியார், திரு நாரையூர்ப் பொல்லாப்

தாயிருந்தும் பிள்ளை தளர்ந்தாற்போல் எவ்விடத்தும்
நீயிருந்தும் நான்தளர்ந்து நின்றேன் பராபரமே.

பிள்ளையார் அருள் பெற்ற ஆதிசைவ குலதிலகர் நம்பியாண்டார் நம்பியும், இராஜராஜ அபய குலசேகர சோழ மகா ராசாவுமாவர். இப்பெரியார், திருமுறைகளின் பெருமைகளையும், அவற்றை யருளிய நாயன்மாரது திவ்விய சரித்திரங்களையும், அவையிருக்கும் இடத்தினையும், திரு நாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார் திருவருளால் அறிந்து, சிதம்பரத்தில் கனகசபையின் பாங்கரில் சமயகுரவர் கையிலச்சினை யிட்ட திருவறையி லிருந்த சைவத் தமிழ்த் திருமுறைகளை முறைப்படி எடுத்து, திருமுறை வகுத்துப் பண்ணடைவு செய்து உலகுக்கு உதவினர்.

அதன் பின்னர் அனபாய சோழ மகாராசாவின் வேண்டு கோட் கிணங்கி, சேக்கிழார் சுவாமிகளால் அருளிச் செய்யப் பெற்ற திருத்தொண்டர் பெரிய புராணம் பன்னிரண்டாம் திருமுறையாக அமைக்கப் பட்டது. இப் பன்னிரு திருமுறைகளையும் அனபாய சோழ மகாராசா செப்பேட்டின் அமைத்து ஸ்ரீநடராசர் சன்னதியில் ஸ்தாபித்தார்,

இவ்வாறாய் இத்திருமுறைகள், பன்னிரு சூரியர்கள் போன்று, உலகினருக்கு அஞ்ஞான இருளை நீக்கி, மெய்ஞ்ஞான ஒளியைக் கொடுத்து உதவும் பெருமை யுடையன. 'வேதம் பசு அதன்பால் மெய்யாகமம், மூவர் ஓதுந் தமிழ் அதனின் உள்ளுறு நெய்' எனப் பெரியோர்களால் கொண்டாடப் படுவன. ஆரிய வேதம் போலன்றி, முழுமுதற் கடவுள் பசுபதியாகிய சிவபெருமானேயன்றிப் பிறரில்லை எனச் சிறப்பு வகையால் எடுத்துக் கூறுவன. நெருப்பி

பாவமென்றுல் ஏதும் பயமின்றிச் செய்யஇந்தச்
சீவனுக்கார் போதந் தெரித்தார் பராபரமே.

லெரியாதன; ஆற்றில் எதிரோடுவன; எலும்புக்கும் உயிர் கொடுப்பன; இட்ட நஞ்சை மாற்றுவன; எதிர்த்து வரும் யானையை வணங்கச் செய்வன; கடலிடை யிட்ட கல்லை மிதக்கச் செய்வன; முதலை தாளுண்ட மதலையைக் கரை யிற் கொணர்ந்து உமிழச் செய்வன. இன்னும் அநேகம் அற்புதச் செயல்களை யுடையன.

இங்ஙனமாய சைவ திருநெறித் தமிழ் வேதங்களாகிய தேவாரம் முதலிய திருமுறைகளைக் கிரமப்படி குரு மூல மாயறிந்து, ஓதி உய்தல் சைவர்களா யுள்ளார் யாவருக்கும் முக்கிய கடமையாகும். சிவபிரானு ரிடத்துப் பக்தியுண் டானு லன்றி, அவரது அருளைப் பெறுதல் ஒருபோதும் முடியாதாம். அதுவும் அப்பிரானுரது திருப்புகழ்களை ஓதுதலினுலேயே உண்டாகத் தக்கது. அதனினும் அவற்றை ஏழிசைகளுடனும், பண்ணுடனும், முப்பத் திரண்டு ராகங்களுள் அவ்வக் காலத்துக்கும், விஷயத் துக்கும் ஏற்ற ராகங்களுடனும் ஓதுவது, எம்பெருமானரி டத்துத் தமக்கும், அதனைக் கேட்கும் பிறருக்கும் பேரன்பை வளரச் செய்யும். அதனுல்,

'விளக்கினுற் பெற்ற வின்பம் மெழுகினுற் பதிற்றி யாகும், துளக்கினன் மலர் தொடுத்தால் தூயவிண் ணேற லாகும், விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும், அளப்பில கீதஞ் சொன்னுர்க் கடிகடா மருளுமாறே'

என நம் நாவரையர் அருளிச் செய்தபடி எம்பெரு மான் பேரருளைப் பாடிப் பார். எம்பெருமான் அருளுண் டேல் நமக்கென்ன குறையுண்டு?

இன்ப நிருவிகற்பம் இன்றேதா! அன்றெனிலோ
துன்பம் பொறுப்பரிது சொன்னேன் பராபரமே.

'என்று மின்பம் பெருகு மியல்பினே
டொன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்றுளா ரடியா ரவர் வான்புகழ்
நின்ற தெங்கு நிலவி யுலகெலாம்'

முருகனடியார் (10)

பகழிக் கூத்தர்

(ரசபதி)

சேது மன்னர் ஆட்சிக்கு உட்பட்டது செம்பிய நாடு. சால்புடைய அந்நாட்டைச் சார்ந்தது சன்னசிக் கிராமம். அருமை வளமுடைய அச்சிற்றூர், காமன் கோட்டின் அண்மையில் உளது. இதற்கு, சதுர்வேத மங்கலம் எனும் பெயரும் உண்டு. வைதிக வைணவ அந்தணர் பலர், இவ்வூரில் வாழ்ந்து வந்தனர். அவர்களுள் ஒருவர் தர்ப்பாதனர்.

திருப்புல்லாணி தர்ப்ப சயனத்தில் திருக்கண் வளரும் இராமபிரானுக்கு, தர்ப்பாதனர் என்பது திருநாமம். அப்பெயரைப் பெற்றோர் இடப் பெற்றவர் இவர். சேது நாட்டுப் புகலூரில் எழுந்தருளிய ஐயனார், இவர் குல தெய்வம். இப்பெருமானுக்கு அரிகர புத்திரர் என்றும், பகழிக் கூத்தர் என்றும் பெயர் உண்டு. மதிகலஞ் சிறந்த தர்ப்பாதனருக்கு ஒரு மைந்தர் உளர். அம்மைந்தர் ஐயனார் அருளால் பிறந்தார் என்பதை எண்ணிய தர்ப்பாதனர், பிறந்த மைந்தர்க்குப் பகழிக் கூத்தர் என்று பெயரிட்டார். சமய பேதம் காணாத சமரச சால்புடையது அவர் குடும்பம்.

இளம் பருவத்திலேயே பகழிக் கூத்தர், வடமொழிக் கடலைக் கடைந்தார். தென் மொழி யமுதம் பருகினார். இலக்கிய இலக்கணங்களில் ஐயந் திரிபற்று இருந்தார். எத்

காச்சச் சுடர்விடும்பொற் கட்டிபோல் நினமலமாய்ப்
பேச்சற் றவரே பிறவார் பராபரமே.

தெய்வத்திற்குத் தமிழில் இச்சையோ, அத் தெய்வங் கட்டளை யிட்டதேல், பரம அத்தெய்வத்தைப் பாடுவம் என்று பல தரம் எண்ணியது மனம்.

* * *

ஐயோ! அப்பா! அம்மா! பொறுக்க முடியவில்லையே என்று கதறுகின்றது ஒரு குரல். என்ன அது! யார் அப்படிக் கதறுகிறவர்?

ஓ! பகழிக் கூத்தரா? என்ன இது? யாது சேர்ந்தது என்று வீதியிலிருந்து ஓடி வந்து வீட்டுள் நுழைந்த ஒருவர், எந்த எந்த உருவிலோ கேட்கிறார்.

சும்மா இருங்கள் ஐயா! என்னால் தாங்கவே முடிய வில்லையே! கூற்றாய் நுழைந்து கொல்லுகிறதே வயிற்று வலி!...ம்...ம்...ம் அம்மா! ஐயையோ என்று புழுவாய்த் துடிக் கிறார் புலவர்.

வந்தவர்க்கு மனந் தாங்கவில்லை. யார் யாரையோ ஓடி அழைத்து வந்தார். மணி மந்திர மருந்து முயற்சிகள் பிரமாதப் பட்டன. நாள்கள் பல நடந்தன; முயற்சி யனைத்தும் விழ லுக்கு இறைத்த நீர். வயிற்று வலியோ, வர வர வளர்ந்து படாத பாடு படுத்துகின்றது.

என்னால் சகிக்க முடியவில்லையே! மெய்ம்மை உருவில் மேவி என்னை ஏற்கும் தெய்வம் எதுவேயோ! அத்தெய்வம் இன்று வந்து அருள் செய்தால் ஆகாதா என்று கதறி, கண்ணீர் பெருக்கியபடியே கண்ணுறங்கினார். பேயும் உறங்கும் பேரிரவு.

* * *

என்ன வியப்பு! திகழ்தரு புன்னகையுடன், பகழிக் கூத்தர் எதிரில் திரிசுதந்தரர் நிற்கின்றார்.

யார் நீர்?

செந்தில்பதியி லிருந்து வந்தேன்.

என்ன வேண்டும் உமக்கு?

பற்றொழிந்து சிந்தைப் பதைப்பொழிந்து தானேதான்
அற்றிருப்ப தென்றைக் கமைப்பராப் பராபரமே.

பிள்ளைத் தமிழில் எமக்கு பிரியம் அதிகம்; இதனை முதலில் பெற்றுக் கொள்ளும் என்று, கை குவித்து வணங்கிய புலவர் கையில், எழுதிய ஏடு ஒன்றுடன், இலை விபூதியையும் நகை முக மாகி அளித்தார். அவ்வளவுதான் !

கனவு கலைந்து கண் விழித்தார் கவிஞர். வியப்பு மிகுகிறது; படுக்கையை விட்டு எழுந்தார். தலையணை மேல் ஏடும் இலை விபூதியும் இருந்தது. மனம் அதிர்ந்தது; விழுந்து வணங்கி இரண்டையும் எடுத்தார். உடல் சிலிர்த்தது; கண்களில் ஒற்றி ஞர்; அன்பின் நெகிழ்வுடன், இலை விபூதியை யணிந்தார். ஏட்டை நோக்கினுர்; அதில் ஒரு பாட்டு எழுதி யிருந்தது. என்ன அதிசயம் !

பூமாது போற்றும் புகழ்பகழிக் கூத்தா ! உன்
பாமாலை கேட்கயாம் பற்றேமா !—ஏமம்
கொடுக்க அறியேமா ! கூற்றுவன்வா ராமல்
தடுக்க அறியேமா தாம்'

என்றிருந்த பாடலைப் படிக்கப் படிக்கப் படபடத்தது மனம். பரம குமரா ! குமர குகா !! முருக ! முருகா !! என்று வீறிட் டுக் கூவினுர். வயிற்று வலி மாயமாய் மறைந்ததை, நினைத்து நெஞ்சம் நெகிழ்ந்தது.

செந்திலாண்டவனே! அறிவு தொடங்கிய அந்த நாள் முதல், எம் சொந்தத் தெய்வம் நீ என்பதை யறியாமல், அந்தோ! ஆயுள் நாள்களை அறியாயப் படுத்தினேன்! உன்னைப் பாடாது பல காலம் பாழுக்கு இறைத் தேன் பாவிநான்! கமலனைக் குட்டிய கையால், கவி யெழுதியும் தந்தாயோ! கந்தஸ்வாமி ! வாளா யிருந்தேனை, வயிற்று நோய் மூலம் வலிந்து வந்து ஆட்கொண்டாய்! பாடவா! இதோ பாடுகிறேன்! பாட்டின் பொரு ளான நீ, பாடும் பாட்டில் பழுதுரு வண்ணம் பாதுகா *என்று ஆருகக் கண்ணீர் பெருக அழுது கதறினுர்.*

முதல்வன் அளித்த பாட்டில் உள்ள முதலடியின் முதல் சீரையே, தாம் பாடும் பிள்ளைத் தமிழ்க்கு முதல் சீராகக் கொண்டார்.

தேடுவேன் நின்னருளைத் தேடுமுன்னே யெய்தில்நடம்
ஆடுவேன் ஆனந்த மாவேன் பராபரமே.

பூமா திருக்கும் பசுங்களபப் புயபூதரத்துப் புருகூதன் போற்ற, புத்தேள் பரவ, கோமா முனிக்குத் தமிழுரைத்த குரு தேசிகனை, உலக அதிக தேவதைகாள்! கனிவொடு சூழ்ந்து காமின்கள் என்று காப்புப் பருவம் பாடினார்.

உன் மழலை மொழியால், என் மயக்கமெல்லாம் தவிராயா என்ற பொருளில், செந்தில்வடி வேலவனே! செங்கீரை யாடி யருளே என்று பரவினார்.

உடலாகிய மாளிகையில் உள்ள இதயத் தொட்டிலில் இருந்தானை, தாலோ தாலேலோ என்று தாலாட்டுப் பாடினார்.

உன் கை கொட்டும் ஓசையால் எம் கர்மமெல்லாம் ஓயுமே! 'தொழுதுனை வழிபடும் அடியவர் இளையவர் சொற்படி தப்பா மல், கொட்டுக சப்பாணி' யென்று குதூகலித்துப் பாடினார்.

மோத வரும் உலகத் தொடர்பொழிய, புத்தமும் ஒத்திலகும் ஒரு முத்தம் தா என்று உவந்து ஓதினார்.

எவரும் எனக்கு வேண்டா; எமை யேற்க வள்ளி கணவா வருகவே என்று வருகைப் பருவம் வாய் மலர்ந்தார்.

வானிலுயர்ந்த மதியோனே! உய்தியுற முருகனுடன் விளையாட வா என்று அம்புலிப் பருவம் அருளினார்.

அருள்நாத நயம் தோன்ற சிறு பறை முழக்கி யருளே! சிறு பணி யென்ற பெயரிட்டு, நாங்கள் சிற்றில் விளையாடுகின்றோம்; செல்வா! சிற்றில் சிதையேலே! குமார கம்பீரனே! எம்மை யேன்று கொள, சிறு தேருருட்டி யருளே என்று பாடிப் பாடிப் பரவசம் எய்தினார். திருச் செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழ் ஒருவாறு நிறைவு பெற்றது.

* * *

ஆறு முகன் திருமுன் இந்நூலை அரங்கேற்றுவேன் என்று, அருள் சிந்தித்திடு கவிஞர், செந்தில்பதி வந்தார். திரிசுதந்தரர் பலரைக் கண்டார்; தன் கருத்தைக் கூறினார், பல பணிமுகத்த ரான அவர்கட்கு, இதனி வீடுபட நேரமில்லை. அதனால் புலவர் வேண்டுதலை அசட்டை செய்தனர்.

உள்ளங் குழைய வுடல்குறைய வுள்ளிருந்த
கள்ளங் குழையஎன்று காண்பேன் பராபரமே.

கவலை மிகுந்தது; கடும் பசி காதை யடைக்கின்றது; களைப்பு மிகுந்தது; மகத்தான கனவுச் செய்தியை எண்ணி மகிழ்ந்த மனம், இன்று நிகழ்ந்த நிலையை நினைந்து நொடிக்கின்றது. செந்திலாண்டவன் மேல் சினம் மிகுந்தது.

முருகா! என் அப்பா! உன் செயல் ஒன்றும் நன்றாயில்லையே! பயனிலாமல் உறங்கி யிருந்தேனை யெழுப்பிப் பாட வைத்தாய்! பாடிய நூலை உன் திருமுன் படிக்க வேண்டாவோ? உன்னைப் பொருளாகக் கொண்ட ஒரு நூலோ அவமதிப்பை யடைவது? என்று குலுங்கிய உடலொடு குமுறி யழுதார்.

அமலன் அருளும் காலம் ஒன்று வரும் என்று எண்ணியது இதயம். மூன்று திங்கள் முழுதும் பொறுத்தார். எங்கெங்கேயோ ஒரு பகல் உண்டார்; பல பகல் பட்டினி கிடந்தார்; அதன் மேலும் தாங்க முடியவில்லை.

ஒரு நாள் இரவு ஒன்பது மணி. முருகா! இனி ஒரு வழி செய்யாயேல், பிள்ளைத் தமிழைக் கிழித்து இப் பெருங் கடலில் எறிகிறேன்! என்னையும் இக்கடல் விழுங்கட்டும் என்று வீறிட்டுக் கூவி, ஒரு வீட்டுத் திண்ணையில் படுத்தார்.

* * *

அற்புதமான ஒரு கனவு; கனவில் நனவும் கலந்துளது. அன்று வந்த கோலத்தில் இன்றும் வந்தான் அமலன். அன்று கோயிலில் தனக்குச் சாத்திய விலையுயர்ந்த அரதனப் பதக்கத்தை, அருங் கவிஞர் மார்பில் அணிந்தான். இப்பதிக்கு அண்மையில் உளது ஆற்றூர்; அங்கு வானமளாவிய ஆலமரம் ஒன்று உளது; அதன் அடியில் சென்றுஇரு. இந்நூலை, யாம் காமுறு பரிசை நாளையே காட்டுகின்றேம் காண்! என்று பகர்ந்து கரந்தனன் பரமன்.

வித்தகக் கூத்தர் வியந்தார். அடியோடு துன்பம் அகன்றது. நைய வைப்பதும், அதன் பின் அன்பரை உய்ய வைப்பதுமான இதுவோ உனது இன்னருள் என்று போற்றிப் புகழ்ந்தார். அத்தன் திருவருள் வெளிப்படும் அதிசயத்தைக் காண எழுந்தது ஆர்வம். அதனால்

பட்டப் பகல்போலப் பாழ்த்தசிந்தை மாளிகையெல்லாம்
வெட்ட வெளியாக விளங்கும் பராபரமே.

அப்போதே புறப்பட்டார். அறுமுகப் பரமன் அறிவித்த இடத்தை யடைந்தார்.

* * *

குமரனுடைய செந்திலைச்சார்ந்துளது, குலசேகரபட்டினம். அங்கு ஒரு அன்பர் உளர். அவர் பெயர், காத்த பெருமாள் மூப்ப னார். செல்வம் சிறந்த அவர், கலையுணர்வும் கைவந்தவர். கவிஞர் கனவில் வந்து கரந்த அதே அமயம், மூப்பனார் கனவில் முதல் வன் மின்றான்.

அன்பனே! ஆற்றூர் ஆலடியில், என்பால் அன்பன் ஒருவன் இருக்கின்றான். பகழிக் கூத்தன் எனும் பெயருடைய அவனைக் கொண்டு, எமக்கொரு பிள்ளைத் தமிழ் பாடிக் கொண்டேம்! மொழியும் சமயம் அனைத்தினுக்கும் முதல்வர் முத்தந் தருகவே என்பது முதலிய அருமை மிக்க அந்நூலின் அடிகள், உவகை மிகுவித்து எமதுளத்தை உருகச் செய்கின்றன. அந்த பிள்ளைத் தமிழ் எனக் குப் பெரிய தமிழ். எவரும் அறியாமல், எமது மார்புப் பதக் கத்தை அவன் மார்பில் அணிந்தேம். பிள்ளைத் தமிழை அரங் கேற்றி, அவனுக்குப் பெரும்பரிசை யளித்தி என்று பரிவொடு அருளினன் பரமன்.

கண்விழித்த மூப்பனார், கசிந்த மனத்தொடு கடனைமுடித்து விமல நீறணிந்து வெளிப்பட்டார். இறைவன் ஆடலை யெண்ணி, இன்பக் கண்ணீர் ஒழுக, பல்லக்கில் ஏறி, பதக்கக் கனவு எவரும் அறியுமுன் அறுமுகன் ஆலயத்தை யடைந்தார். விளைவை யெவர்க்கும் விளக்கினார். புலவரை நோக்கி விரைந்தார். அனை வரும் வியந்து தொடர்ந்தனர். வைகறையில் நீராடி, உமையாள் குமரனை உன்னிய உளத்தொடு, ஆலடியி லிருந்தாரை யணுகி னார். பல்லக்கி லிருந்து இறங்கி பாவலரைப் பணிந்தார்.

புலவர் திலகமே! முருகனுக்கு மோகம் விளைத்த உமது தமிழே தமிழ்! உமது தவமே தவம்! குமரப்பெருமான் எம் கன வில்போந்து நிகழ்ந்த தனைத்தும் கூறினன். எம்பெருமான் சேவை

பார்க்கினனுப் போற்கிடந்த பாழ்சிந்தை மாளினென்னை
யார்க்குச் சரியிடலாம் ஐயா பராபரமே.

உம்மால் எமக்கு எய்தியது. வாழ்க உமது பேரன்பு என்று மீட்டும் வணங்கினூர்.

ஆர்வம் வெளிப்பட மூப்பனூர் அறிவித்த பொன் மொழிகளால், புலவர் உள்ளம் புளகித்தது.

உமையாள் மைந்தன் உமது கனவிலும் வந்தானே? எம்பெருமான் கருணையை யறியாமல், தீவினையேன் ஏதோ ஏதோ பேசினேனே! அமலன் அருள் பெற்ற உம்மைச் சேவிக்க என்ன தவம் செய்தேனே என்று முன்னுரை கூறி மூப்பரை வணங்கினூர். ஒருவரை யொருவர் தழுவி உவந்தனர்.

* * *

மாமியும் மருகியும் உறவு கொண்ட அதிசயம் போல், பொருட் செல்வரும் கலைச்செல்வரும் சிவிகையில் சேர அமர்ந்து செந்திலையடைந்து, அமலன் கோயில் அண்மையில் இறங்கினர்.

பிள்ளைத் தமிழை அர்ச்சனை நடத்தி, யானைமேல் வைத்து நகர் வலம் நடத்தினர். இந்திரற்கருளிய சந்நிதியில் அரங்கேற்றம் இனிது நிகழ்ந்தது; அவ்வமயம் திடீரென்று ஒருகுரல் எழுந்தது.

'செந்தமிழ்க்கு வாய்த்த திருச்செந்தி லம்பதியில்
கந்தனுக்குப் பிள்ளைக் கவிசெய்தான்—சொந்தத்
திருமார்பு சேர்மார்பன் தேர்ப்பாகன் வண்மை
தருமால் பகழிக்கூத் தன்'

என்ன வியப்பு! பாடியது யார்? அரங்கேற்றத்தி விருந்த ஆயிரக் கணக்கான அன்பர்கள் சுற்றுமுற்றும் நோக்கினர். பாடியவர் உருவம் கண்ணில் படவில்லை. இதுவும் பரமனருள் என்று வியந்து, திருச்செந்தில் பதியானுக்கு அரோகரா என்று வானளாவ எழுப்பிய பேரொலி, அருள் நாத நயப்பை நினைப்பூட்டி, புல்லரித்து உடலைப் புளகிக்கச் செய்தது.

கந்தப் பரமன், உமக்கும் மூப்பர்க்கும் காட்சி யாயினன்; அருள் ஆடல் நிகழ்த்தி, எண்ணினுரை ஏன்று கொள்ளும் எளிய பெருமான் எம்பெருமான் என்பதை, எங்குமுள எவரும் அறியச்

பாட்டுக்கோ அன்பினுக்கோ பத்திக்கோ அன்பர்தங்கள்
நீட்டுக்கெல் லாங்குறுகி நின்றாய் பராபரமே.

செய்தனன். உமது அருமை யறியாது மறுத்த எமது அபசாரம் பொறுக்க என வேண்டிய அதிகாரிகள், பகழிக் கூத்தரைப் பல்லக்கி லேற்றி, மங்கலப்பறை முழங்க நகர்வலம் செய்வித்து, பரமன் திருமுன் தீர்த்தம், இலைத் திருநீறு, சந்தனம், மாலை, பரி வட்டம் முதலியவற்ருல் உபசரித்து, அருட் புலவர் என்ற பட்ட மும் அளித்தனர். பகழிக் கூத்தர் மகிழ்வுற, மூப்பனுர் ஏரான மான பரிசுகளை வழங்கினுர்.

நடந்த சம்பவங்களால் பரவசம் மிகுந்த பகழிக் கூத்தர், பதக்கத்தையும் பரிசுகளையும் பரமன் திருப்பணிக்கே அர்ப் பணித்தார்; செந்திலைப் பிரிய மனமின்றி, அங்கேயே சேர்ந் திருந்தார். காத்த பெருமாள் மூப்பரும் அவருடன் கலந்து, இரு வரும் காலந் தவருமல் கந்தப் பரமனை வந்தித்து இருந்தனர். பலநாள் இங்ஙனம் கழிந்தது.

ஒருநாள், வீதியில் அன்பர் திரள் திருப்புகழ் ஓதுகின்றது. பகழிக் கூத்தரும் மூப்பனுரும் இருந்த இடத்திருந்து எழுந்தனர். முருகா! முருகாஎனத் தொழுதகை தலைமேலேறத் துளும்பு கண் ணீருள் மூழ்கினர். வித்தக மெய்த்தவ இருவர் உடலும் வீழ்ந்தது.

சிறுதேருருட்டிய செவ்வேள் அருளால், இருவர் உயிரும் இறையடி நிழலின் இன்பம் துய்த்தது.

செந்திலில் வழிபாடு முடிந்ததும், வேதத் திருப்புகழ் ஓதிய பின் ஓதுவார்கள் பிள்ளைத் தமிழை அன்பொடு இன்றும் ஓது கின்றனர். இந்நூலைப் பாராயணம் செய்து, தீரா நோய் தீர்ந்து இன்புறும் அன்பர் பலர் இன்றும்உளர்.

வேலவரும் தமிழும் (3)

(ஸ்ரீ வத்ஸன்)

சூரபதுமன் கொடுமை தாங்க மாட்டாது, தேவர் கள் மேலும் வருந்துவா ராயினர். இமைக்கு முன் சாம்பற் குவியலாக மன்மதன் மாறியதும், தேவர்கள்

முத்தாந்த வித்தே முளைக்குநில மாயெழுந்த
சித்தாந்த மார்க்கச் சிறப்பே பராபரமே.

கவலையற்று இருந்தனர். அப்போது தான் லேசாக நிட்டை நீங்கிய சிவபிரானும் நந்தி தேவரை நினைத்தார். அவரும் வணங்கி, தேவர்கள் வேண்டுகோளையும், மன்மதன் சாம்பற் குவியலான விசித்திரத்தையும் எடுத்துரைத்தார். இதுவே தருணம் என்று கருதிய இரதி தேவியும் அரனைப் பணிந்து, தேவர்கட்கு உதவி அளிக்கத் துணிந்த ஒரு பிறவிக்கு இக்கதி நேரல் முறையோ கருணை புரிய வேண்டும் என்று வணங்கி நின்றாள்.

யாம் உமையை மணக்குங்கால் உன் புருடனும் புத்துயிர் பெறுவான் என்று அபய மளிக்க, இரதி தேவியும் இமயத்தின் சார்பு சென்று உமையின் திருமண காலத்தை எதிர் பார்த்து நிற்கலானாள்.

சிவபிரான் விருத்தர் வேடம் பூணல்

நிட்டை கலைந்த சிவபிரானும், சனகாதி முனிவர்கட்கு விடை கொடுத்தனுப்பி, இமயத்தின் சாரலில் செல்லவே, அங்கு தவம் புரியும் உமையைக் கண்டார். உடனே ஓர் விருத்தர் உருக் கொண்டு அங்கு காவல் புரிந்து வந்த தோழிகள் முன் தோன்றி, தாம் தவம் புரியும் சூழ்நிலையைப் பார்க்க விரும்புவதாகக் கூற, அவர்களும் உமையிடம் சென்று அறிவித்தனர். உமாதேவியும், விருத்தர் என்பதைச் செவ்வனே யறிந்த பின் அனுமதித்தாள். வந்த விருத்தரை உபசரித்து, வந்த காரியம் வினவினள்.

உமையின் வைராக்கியம்

பிரமாதி தேவர்களும் அடைதற்கரிய சிவபிரானை அடைய ஓர் சிறுமி தவம் கிடப்பது விந்தையே. மேலும்

உன்னு வெளியாய் உறங்காத பேருணர்வாய்
என்னுவிக் குள்ளே இருந்தாய் பராபரமே.

அரச குலத்துப் பெண், தவத்தில் ஈடுபடுவதை நிறுத்தி தனக்கு உரியனவற்றைச் செய்தலே முறை என்று கூறினார் விருத்தர். இவரை யார் வரச் சொன்னது? சிவபிரானை இகழ்ந்து கூறும் இவர் இங்கிருந்து செல்லட்டும் என்று தன் துணைத் தோழிகளிடம், சீற்றங் கொண்ட தவ நிலை பூண்ட உமாதேவியும் வெகுண்டார். சற்றும் அறியாதவர் போல் தோற்றும் அவ்விருத்தரோ மேலும் கூறுவார். குழந்தாய்! நீ வேண்டிக் கிடக்கும் அச்சிவனுக்கு தாய் தந்தை சுற்றத்தினர் உளரோ. அவரது நிலை மிகவும் விரும்பத் தக்கதல்ல. ஆடையோ தோல், வாகனமோ எருது, ஆபரணம் அரவம், பாத்திரம் கபாலம், உணவு விஷம், சூடுவது வெள்ளெருக்கு, பூசுவது சாம்பல், தொழிலோ பிச்சை, நடமாடும் இடமோ இடுகாடு. இத்தகையவரை விடுத்து உம் அரச குலத்திற் கேற்ற ஒருவரைக் கொள்ளலே நலம் என்று உரைத்ததைக் கேட்டாள் உமையும். மிகவும் கோபத்தை யடைந்து பெரியவரே, நீர் விருத்தரானது பற்றி விடுத்தோம். சிவநிந்தை செய்யும் நீர் சீக்கிரத்திலேயே அப்புறம் செல்லும்; நீர் செல்லாவிடில் யாமே செல்லுகிறோம் என்று செவிகளைப் பொத்திய வண்ணம் சிவ சிவ என்று கூறிக் கொண்டு உமாதேவி அவ்விடத்தை விட்டு அகன்றனர்.

விருத்தர் உருவில் தோன்றிய சிவபிரானும், அக்கணமே இடப வாகனத்தில் காட்சி யளித்து, அஞ்சற்க; யாம் வந்து ஆட்கொள்வோம் என்று கூறிக் கைலையை யடைந்தார்.

உமாதேவியும் ஒரு புறம் நாணம் வெட்கம் அடைந்த

தத்துவமெல் லாமகன்ற தன்மையர்க்குச் சின்மயமா
நித்தமுத்த சுத்த நிறைவே பராபரமே.

வளாய், பிழை பொறுப்பீர் என்று வேண்டிக் கன்னி மாடம் சென்றனன்.

தவம் செய்யச் சென்ற குழந்தை திரும்பியதும், இமயத்தரசன் மேனு தேவியுடன் உண்மையை யறிந்து மட்டற்ற மகிழ்ச்சியை யடைந்து மணத்திற்கு ஆயத்தம் செய்யத் தொடங்கினன்.

மணம் பேசல்

தேவர்கள் வேண்டுகோளுக் கிணங்க, சப்த ரிஷிகள் சிவபிரானிடம் சென்று அவரது அனுமதி பெற்று, இமவானிடம் சென்று சிவ கட்டளையை அறிவித்தார்கள். முறைப்படி வந்த அவ்விருடிகளை மிகவும் வணங்கிய இமவான், ஆனந்தமடைந்து மேனு தேவியிடம் அறிவிக்க, அவளும் சற்று சிந்திக்கலானள். முன்பு இவருக்குப் பெண் கொடுத்த தக்ஷன் நிலையை நோக்கில், இப்போது— என்று தயங்கிய நிலையிலுள்ள மேனு தேவியை ரிஷிகள் தேற்றினர்கள். நிலைமையை உணர்ந்து சிவ கட்டளையை அங்கீகரித்தலே முறை என்ற கருத்துக்கள் நிறைந்த மொழி களைக் கேட்ட மேனு தேவியும் ஒருவாறு சம்மதித்தாள்.

மணக் கூடம் அலங்கரித்தல்

இமவான் கட்டளைக் கிணங்க தேவ தச்சன் மாட மாளிகைகள் நிர்மாணம் செய்தான். கலியாண மண்டபம் நிர்மாணிக்கப் பட்டது. சிவபிரானும் அவரைச் சார்ந்தவர் களும் தங்க தனித் தனி மாடங்கள் தயாரிக்கப்பட்டு, யாவும் பலவித புஷ்பங்கள் தோரணங்கள் பழ வர்க்கங்கள் முதலியவைகளால் அலங்கரிக்கப் பட்டன. அஷ்ட

உள்ளக் கொதிப்பகல வுள்ளுள்ளே ஆனந்த
வெள்ளமலர்க் கருணை வேண்டும் பராபரமே.

மங்கலச் சின்னங்களாகிய கண்ணாடி, பூரண கும்பம், இரட்டைச் சாமரம், ஸ்ரீ வற்சம், சுவஸ்திகம், சங்கம், தீபம், இடபம் முதலியவைகள் நிறுவப் பெற்றன. இலக்குமி, வாணி, இந்திராதி தேவமாதர்கள், ரிஷிகள், மேரு, கந்தமாதனம், ஏமகூடம், நீலம், சுவேதம், நிடதம், சிருங்கம் முதலிய மலை வாசிகள், கடல் வாசிகள், உரக வேந்தர்கள், ஐராவதம் முதலிய யானைகள் யாவும் ஆயத்தமாயின.

மண அழைப்பு

யாவும் ஆயத்தமானதும், இமயத்தரசு, பந்துக்கள் மந்திரிகள் முதலானவர்களுடன் கைலையை யடைந்து, சிவபிரானிடம் விண்ணப்பம் செய்தார். பங்குனி மீ உத்திரம் நட்சத்திரம் கூடிய நன்னாளில், சகல கண பரிவாரங்களுடன் தமது இல்லம் வந்து, உமாதேவியை மணம் புரிந்து தேவர்கள் விருப்பத்தை நிறைவேற்றுமாறு வேண்டினார்.

அங்ஙனமே யாம் வருவம்; நீ செல்லுக என்ற சிவச் சொற்கள் செவிகளில் பட்டதும் மகிழ்ச்சிக் கடலில் புகுந்து இமவானும் தன் மனை சென்றனன்.

அதிசய மநேக முற்ற பழநி

திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம் பிள்ளை, B. A., B. T,

(406-ஆம் பக்கத் தொடர்ச்சி)

குராவடி வேலர் :—

எய்யா நல்லிசை வையாபுரித் துறையை வணங்கிச் செல்வோர் அடுத்துக்காண உள்ள பெருமான் திருக்குராவடி நிழல்தனி லுறைவோனாகிய திருக்கை வேல் வடிவு

என்னைப் புரப்பதரு ளின்கடனும் என்கடனும்
நின்னிற் பணியறவே நிற்கை பராபரமே.

அழகிய பிரானேயாம். மணநாறு மலர்களில் மயிலோன் விரும்பி யணிபவை நண்பு தரும் தண் கடம்பு, இச்சை தரும் செச்சை மலர் (வெட்சி), எள்ளலில் சிறப்பின் வெள்ளில் குறுமுறி (விளாந்தளிர்), மகிழ்தரு மணத்தின் மகிழ மலர், தங்கிய நிறத்துச் செங்கழுநீர் முதலியன ஒரு சில.

" மொகுமொகென மதுபமுரல் குரவு விளவி னதுகுறு
முறியும் மலர் வகுளதள முழுநில தீவரமும் முருகு கமழ்வதும்......
......மணநாறு சீறடியே "

(சீர்பாத வகுப்பு)

(மொகு மொகென்று வண்டுகள் ரீங்காரஞ் செய்யும் குராமலரும், விளாமரத்தின் தளிரும், இளந்தளிருடன் கூடிய மகிழ மலரும், செங்குவளை முழு மலரும், கருங்குவளை மலரும் மணம் வீசுவதும்....முருகனது மணநாறு சீறடி என்க)

இவ்வரிசையில் முதலாவதாகக் காணப்படுவது குரா மலர் ஆகும். குரா - குரவம் எனவும் படும். முருகனும் குரவன் (பரமாசிரியன்) ஆதலின் குராமலரை விரும்பி ஏற்றனன் போலும். குராமரத்தடியில் குமரன் எழுந்தருளுங் கோலமும், குராமலரை மாலையாக அணிதலும், அப்பெருமானை வழிபாடு செய்வோர் அவன் திருவடிகளைக் குரா மலர் புனைந்து ஒப்பனை செய்வதாலும், அப்பெருமானுக்கு உகந்த மலர்களில் குராவும் ஒன்றென்பது புலனாகும்.

" குராப் புனை தண்டையந் தாள்தொழல் வேண்டும் "

(கந்தரலங்காரம்)

தானேயா நன்னிலையைத் தந்தஅருள் ஆனந்த
வானே மனோதீத வாழ்வே பராபரமே.

பிறிதுபராக்கற, விறைவு குராப்புனை யுங்குமாரா
முருக சடாக்ஷர சரவண கார்த்திகை முலைநுகர் பார்த்திப
—என்று பாடி
மொழிகுழறுத் தொழுது அழுதழு தாட்பட முழுது மலப்பொருள்
—தந்திடாயோ "
(திருப்புகழ்)

என்ற திருவாக்குகளை உன்னுக.

ஆதலின் குடிலச் சடிலர்க்கும் குரவனை குகவேள் குராவடி வந்த வரலாறு கூறுவாம்.

குறுமுனி விரதம் :—

நேசித்துப் பூசிப்போர் வீடடைந்து நிலவுதற்குதவும் காசியம் பதியில் தங்கிய புகழுடைய அங்கிரா என்ற முனிவர் தலைமையில் மாநாடு ஒன்று கூடியது. சினத்தை முனிந்த செல்வர்கள், முன்னவனை முன்னிய முனிவரர் பலரும் அங்குக் கூடி யிருந்தனர். மகத்துவ மிக்க அகத்திய முனிவரும் அதிற் கலந்து கொண்டார். மாநாடு தொடங்கியது. வரவேற்புரை வழங்கிய பின் தலைமை தாங்கிய அங்கிரா, தன்னுரையான முன்னுரை நிகழ்த்தினர். அப்போது காசியின் மேன்மையைக் கவினுறக் கூறினர். ஆயினும், செம்பொருளான நம்பர் அருளாமையால், முற்றுமுணர்ந்த முனிவர் பெருமானர் சற்றே தவறி, வெற்றுரையாய்ச் சில விளம்பினர். \ எந்நாட்டினும் மிகு நன்னடாவது வட புலத் தொளிரும் வட நாடாகும். அளகையானை அரனர் தோழன் பளகு (குற்றம்) அறு பழம்பதி வட புலத்ததுவே. சங்கர னிருக்கையாத் தங்கிய கைலையும், பொன் மலை மேருவும், அமரர் தம் வாழ்வும் அனைத்தும் ஒளிர்வது வட திசை மேவலால். அத்திசைக்குறு புகழ் எத்திசைக்கு

மண்ணாதி பூதமெல்லாம் வைத்திருந்த நின்னிறைவைக்
கண்ணுறக் கண்டு களித்தேன் பராபரமே.

மிலே. தென்திசை எனிலோ, தீயர்வாழ் நரகம். எமனது இருக்கை எல்லாமுடையது. அங்கு வாழ்வோர் அனைவரும் பாவிகள் என்பன போன்ற இழிமொழி பேசினர். கேட்டவர் எல்லாம் தலையை அசைத்தும் கைகளைக் கொட்டியும் 'ஓம்' என ஒப்பினர்.

செந்தமிழ்க் குறுமுனி சீறினர் எழுந்தார். " தலைவரே! போதும், தாழ் மொழி நிறுத்தும். செந்தமிழ்த் தீஞ்சுவைத் தென்றலும் தவழும் தென் திசைப் பகுதியோ, தீயவர் வாழ்விடம்! நன்று! நன்று!! யாகாவா ராயினும் நாகாக்க - என்ற பொய்யில் புலவன் பொருளுரை போற்றுவீர்! கண்ணுதற் கடவுள் மண்ணுலகதனின் பொன்னுடனப்புகழ் தென்னுடைய சிவம்எனப் போற்று முறையையும் தூற்றுவதழகோ? அவன் எந்நாட்டவர்க்கும் இறையென்பதும் எண்ணவில்லையோ? என் கண்ணெதிரில் பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்து இருப்பிலே வளர்ந்து வையை ஏட்டிலே தவழ்ந்த தனித் தமிழ் அணங்கின் சார்பெண்ணும் தென்திசை தமிழ்ச் சுவை யறியார் பழிசொல விடமாட்டேன். தென்னாட்டை எந்நாட்டினும் முன்னாட்டு நன்னாடாகச் செய்கிறேன் '' என்று சூளுரை புகன்று வெளியேறினர். கலங்கிய நிலையில் மாநாடு கலைந்தது.

செவ்வேள் திருவருள் :—

காசியை அகன்று கயிலையை யுற்றனர் முத்தமிழ் உணர்ந்த வித்தக முனிவர். கந்தவேளிருக்கையாய் விளங்கும் கயிலையின் ஒரு பாலுள்ள கந்தகிரி சென்று கடுந்தவமியற்றினர். தவத்திற்கிரங்கிய தயவாளனாகிய சண்முகம்

அறியாமை ஈதென் றறிவித்த அன்றேதான்
பிறியா அருள்நிலையும் பெற்றேன் பராபரமே.

பரமன் தரிசனை தந்தான். குடமுனியும் தம் கருத்தையும் காசி மாநாட்டில் அங்கிரா பேசியதனைத்தும் கூறினர். உடனே வேலண்ணல், சிவனுர் கூறுன சிவகிரி என்பதும் சத்தியின் அமிசமாம் சக்தி கிரி என்பதுமான இரு கனமலைகளைக் காட்டி, அவற்றைத் தென்னுட்டில் கொண்டு போய் வைத்தால் வட நாட்டு வளமனைத்தும் அந்நாட்டிற்கே உரித்தாகும் என்று கூறி அவற்றைக் கொண்டு போதற்குரிய ஆற்றலையுந் தந்தனன். அகமிக மகிழ்ந்த அகத்திய முனிவர், அவ்வாறே அறுமுகச் சிவனுர் அடிமலருன்னி இருமலைகளையும் எடுத்தனர். செவ்வேட் பரமன் திருவருட் செயலால் மலைகளிரண்டும் பந்துகள் போலச் சுமையின்றித் தோன்றின. அவற்றைக் கொண்டு செல்பவர், கேதாரத்தை அடுத்த பூர்ச்சவனம் புகுந்ததும், மலைகள் கனக்கத் தொடங்கின. மேலும் சுமக்க மாட்டாது, முனிவர் அவற்றை அங்கே வைத்துப் பொதியம் நோக்கிப் புறப்பட்டனர்.

இடும்பனும் இடும்பியும் :—

அவ்வாறு செல்லும் போது குற்றால மாவதொரு வளநகரைக் குறுமுனிவர் குறுகினர். குறும்பலா வீசாாய் விளங்கும், உயிர்போங் காலத்து உற்றதுணை யாகும் குற்றால நாதரைப் பணிந்து திரும்பும்போது, உயர்ந்த தோற்றமும், கருத்த மேனியும், வெளுத்த நீறணி நெற்றியும், அஞ்சாமை மிக்க கண்களும், விசிறிபோன்ற (கிருதா) மீசையும், கண்மணி மாலைபுரளும் பரந்த மார்பும், குவித்த கையுமாக எதிரில் யாரோ ஒருவன் நிற்கக் கண்டனர். மிடுக்குடைய நடையனுயினும், அசுரத் தோற்றத்தவனுயினும்,

---

தீதெனவும் நன்றெனவுந் தேர்ந்துநான் தேர்ந்தபடி
ஏதும் நடக்கவொட்டா தென்னே பராபரமே.

திருநீறும் கண்டிகையும் பணிமொழியும் கண்ட அகத்தியர்க்கு இவனிடம் தனி மதிப்புத் தோன்றியது. குறுமுனிவரும் அவனை நோக்கி ஊர், பெயர், தொழில் முதலியவற்றை வினவினர். உடனே அவன் முனிவர் திருவடிகளை வணங்கி, "எம் பிறையே! அடியேன் சூரபதுமன் நகரான வீரமகேந்திரத்திலிருந்தேன். என் பெயர் இடும்பன் என்பர். சூரபன்மனாதியோர்க்கு வில்லாசிரியனாய் விளங்கிப் புகழ் கொண்டேன். கந்தவேளுடன் வந்தது பெரும் போர். திருமுருகனுக் கெதிராகக் கையெடுத்தார் தலை எடுப்பதில்லை என்பதுணர்ந்து அந்நகரை நீங்கி, இவ்வனை நண்ணினேன். என் அருகிலுள்ளவள் நான் மன்றல் வினைமுடித்த மனையாட்டி. என்னைப் பேரினும் பிரியாத பிரியநங்கை இடும்பியாகும். முனிவர் பெருமானாகிய தங்களைக் கண்டது, நான் முன்னைய பிறவியிற் செய்ததவப் பேறாகும். ஆதலால் எளியே னுய்யுமாறு உமது காலாவிட்ட எந்தப்பணியும் தலையால் செய்யச் சித்தமாயிருக்கிறேன். தண்ணளி செய்ய வேண்டும்" என்று பன்முறை வேண்டினான்.

முனிவருபதேசம் :—

தமது கருத்தின்படி மலையிரண்டினையும் தமிழகங் கொணரத் தக்கவனிவனே என்று முனிவர் மனத்தில் சிந்தித்து, "அன்ப! வடக்கே கேதாரமென்று தலமொன்றுளது. அதன் பக்கத்தில் பூர்ச்சவனமென்ற ஒரு புனித வனமுளது. அதில் சிவகிரி சத்திகிரி என்ற இருகுன்றுகளை நான் வைத்து விட்டு வந்தேன். அவற்றைக் கொணர்ந்து வன்மைகூர் என்மலைத் தடத்தில் வைத்தாயா

கண்ட அறிவகண்டா காரமென மெய்யறிவிற்
கொண்டவர்க்கே முத்தி கொடுப்பாய் பராபரமே.

றால், உனக்கு நன்மைகள் யாவும் விளைந்திடும் என்று சொல்லி அம்மலையுள்ள தலத்திற்குச் செல்லும் வழியையும், மலை சுமக்கும்போது வழிக்குத் துணையாக முருகப்பிரானது சடக்கர மனுவையும் உபதேசித்தனுப்பினர். இடும்பன், இடும்பியுடன் பொதிகை முனிவர் திருவடிகளை வந்தித்து வழிக்கொண்டனர்.

மலை கொணர்ந்த மாண்பு :—

இடும்பன், தன் மனைவியோடு காடும், மலையும், நதியும் பல கடந்து பூர்ச்சவனமுற்றான். கண்டான் இரு மலைகளையும். உள்ளம் பூரித்தான். இடும்பியை அழைத்தான். "அசுரவல்லீ! கேதாரங்காணும் கண்கள் புண்ணியமுடையன என்பர். ஆனால் பூர்ச்சவனங் கண்டு, அங்குள்ள புனித மலைகளையும் காணும் பேறு அவற்றைவிட மிக்க மேன்மையாம். இவ்வுலக இன்பச் செல்வமும் திரண்டிரு மலைகளா யமைந்துள்ளன. இவற்றைக்கண்ட கண்களும், புகழ்ந்த வாயும், தீண்டிய மனமும் கரங்களும் இன்பமுற்றன. இனி நமக்குப் பிறப்பும் இறப்பும் இல்லை" என்றான். இடும்பியும் தன் குற்றமற்ற கைகளைக் குவித்து வணங்கினாள். பின்பு தன் ஆசானுரைத்த வண்ணம் அம்மலைகளை வலஞ்செய்து, எதிரில் இருந்து ஆறெழுத்தாண்டவனை எண்ணித் தவத்திலாழ்ந்தான். "முருகா! முருகா!! முருகா!!!" என்ற குரல் கேட்டதும் முன்னியது முடிக்கும் முருகனருள் துணை செய்தது. படீர்! படீர்! என்ற ஒலியுடன் பூமி பிளந்தது. பிளப்பிலிருந்து எட்டுப் பாம்புகள் எழுந்து வந்தன; பக்கத்திற்கு நன்னாலாகப் பின்னி இரண்டு உறிகளாயின. விண்ணிலிருந்து பிரமதண்

ஈருக வல்வினை நான் என்னுமல் இன்பசுகப்
பேறும் படிக்கடிமை பெற்றேன் பராபரமே.

டொன்றும் விழுந்தது. கண் விழித்தான் இடும்பன்; களி பொங்கியது; அவனுக்கு இறைவன் கருத்து நன்கு புலப் பட்டது. 'அரஹரா' என்ற ஒலியுடன் மலைகளை எடுத்து இரண்டு உறிகளிலும் வைத்து, பிரமதண்டை இடையில் மாட்டினன். சுமைதூக்க உதவும் காவடிபோல் அவை நிற்பதை அறிந்து புளகிதமுற்றான். பின்மெள்ளக் குந்தி இடமுழந்தாளைத் தரையி லூன்றினன்; பிரமதண் டத்தை தோளில் ஏற்று, இருகரங்களையும் தொடை மேலாக்கிய வண்ணம் இறைவன் திருநாமஞ் சொல்லியே எழுந்தான். தூக்கும் சுமையெல்லாம் சுந்தரக் குகனுக்கே உரித்தாக்கி எழுந்தான். அருகிலிருந்த அசுர அணங்கு, கணவன் சுமக்கும் பாரங் குறையவேணும் என்று உருக்க மான குரலில் "அரஹரா! அரஹரா!" எனவே சாற்றி னள். மலையும் எழுந்தது. நடந்தனன் இடும்பன்.

காவடியானுக்குக் காட்டிய கருணை :—

தோட்சுமை தூக்கும் காவடி எடுக்கும் மற்றவரைப் போலல்லாமல், இடும்பன் நிலையே வேறுவகையா யிருந் தது. காவடியைத் தோளில் வைத்தான்; கந்தவேளைக் கருத்தில் வைத்தான்; பூதலத்தில் அடிவைத்தான்: பொன்மயிலோன் அருள்வைத்தான். மலையாட, பாம்பு வடமாடத் தோள் சுமையாடத் தாழ்வடமாட அரை உடையாட தாள்கழலாடத் தானும்ஆடத் தலைப்பட்டான். தன்வசங் கெட்டான்; பரவசப்பட்டான். செஞ்சொல் வாணி வந்திருந்தனள் அன்பன்தன் நாவில். பாடியே அறியா அவன்வாய் பாடத்தொடங்கவே,

---

பெற்றார் அனுபூதி பேசாத மோனநிலை
கற்றார் உணைப்பிரியார் கண்டாய் பராபரமே.

" அமரர் சிறைவிடுதலை செய்விமலா !
அடியவர்கள் துயரமுறின் அதனை அடும்அமலா!
சமநிலையர் நினைவிலுறு பொருளே !
தகுதகையர் தொழுவிமல மலயமுனி அருளே !
கமலஅய னறிவரிய சிவனே !
கரிமுகவ னிளவலென மிளிர்பரம பவனே !
குமரகுரு ! குமரகுரு ! எனவே
குயில்பவர்க ளிதயமன வரதம்வளர் நினைவே ".

(பாம்பனடிகள்)

என்ற அமுதப் பாடல் தானாக எழுந்தது. கால்கள் தாமாக நடந்தன. வள்ளயிற் பெருமான் அருளால் மலைச் சுமையும் குறைந்தது. இடும்பியும் இலை வேலண்ணலை இறைஞ்சிய வண்ணமே உடன் நடந்து வந்தாள்.

நெடுந்தூரம் சென்றபின் ஓரிடத்தில் வழி இரண்டாய்ப் பிரிந்தது. இடும்பனுக்கு எவ்வழிச் செல்வதென்று தெரிய வில்லை. மயங்குவோர்க்கு வழிகாட்டும் வள்ளல்பிரான், காற்றினும் கடுகிச்செல்லும் குதிரைமீதேறி வேட்டைக்குச் செல் இளவரசன்போல் வேடந்தாங்கி எதிரில் நின்றான். உடனே இடும்பன், வில்பிடித்து மாவேறி (குதிரைஏறி) என்முன் நிற்கும் தாங்கள் யார்? பொதியமலைக்குப் போகும் வழி எது? அன்பு கூர்ந்து அருளுக என்று பணிவுடன் கேட்டான். மாவேறிய மன்னனும் அன்பனே! பாரத உலகங் காக்கும் இறைவன் மகன் (இராச குமாரன் சிவகுமாரன்) யான்; வேட்டைக்காக இங்கு வந்தேன். நீ கொஞ்சமும் அஞ்சாமல் இந்தவழியே சென்றால் வராகமுனி பூசித்த வராககிரி காட்சியாகும். அதோ

நீயேநான் என்று நினைப்பும் மறப்புமறத்
தாயே அனையஅருள் தந்தாய் பராபரமே.

பாதையில் செல்க என்று பணித்து மறைந்தான். இடும்பனும் இறைவன் பணித்தவாறே கொஞ்சதூரம் நடந்து வாமதேவ முனிவ ராச்சிரமம் அடைந்தான்.

தடுத்தாண்ட தயவு :—

அதற்குமேல் இடும்பனால் ஓர் அடியும் வைக்க இயலவில்லை. கால்கள் பின்னலிட்டன ; பாரம் அதிகமாய்த் தோளை முறிக்கும்போ லிருந்தது; பசியொருபுறம் பற்றித் தொடர்ந்தது ; உடலைப்போல உள்ளமும் சோர்ந்தது. உடனே இடும்பன் சுமையை அங்ஙனே இறக்கிச் சிறிது இளைப்பாறினன். இடும்பி, கணவனுண்ணுமாறு சிலகனிகளைப் பறித்து வந்துதவினாள். உண்டபின் இடும்பனைச் சிறிது தங்கவிட்டு இயற்கை அழகை அநுபவிக்கச்சென்று சூழ இருந்த சோலையை அடைந்தாள். இளைப்பாறி எழுந்த இடும்பன், செவ்வேள் செயலால் பாரமெளிதாயிருந்த மலைகள், இவ்விடமுற்றதும் கனத்த காரணத்தை ஆராய எண்ணி மலைகளைக் கூர்ந்து கவனித்தான். ஆ, என்ன வியப்பு! சிவகிரிமேலே **குராமரம்** ஒன்று தெரிந்தது. அதன் அடியில் என்றுமகலாத இளமையின் வளமையுடன் புன்குடுமி தாழ்ந்தசைய, செம்மேனி சிறந்தொளிர, வலக்கரத்தே கோல் ஒன்று ஏந்திய குருந்து உருவக் குமரன் ஒருவன் நிற்பது கண்டான். உடனே அவனைப்பார்த்து 'சிறுவ! நீ ஏன் இங்குத் தனியாய் நிற்கிறாய்! வழி தவறி வந்தாயோ ? அன்றி எம்மலையினும் சிறந்த இம் மலையை உனக்குரிமை கொள்ள எண்ணி வந்தாயோ? வாய் திறந்து சொல்லுக" என்றான். குழந்தைப் பெருமான் பதிலொன்றும் கூறாமல் புன்முறுவல் பூத்தான். கண்ட

சஞ்சலமற் றெல்லாம்நீ தானென் றுணர்ந்தேனென்
அஞ்சலியுங் கொள்ளாய் அரசே பராபரமே.

இடும்பன் கடுங்கோபங்கொண்டு, 'உருவம் சிறிதாயினும் ஆங்காரம் பெரிது! இம்மலையைவிட்டு அப்புறம்போ; நான் கொலை அவுணன்-நினைவிருக்கட்டும்' என்று அதட்டினன். குகனும், 'அப்படியா! இந்தமலை எனது சொந்த மலை. உனக்குப் பலமிருந்தால் கொண்டுபோ! பார்க்கலாம்!' என்ருன். இதுகேட்ட இடும்பன் கடுங்கோபங் கொண்டு இளங்குமரன்மேல் பாய்ந்து அவனைக் கொல்ல முயன்ருன். முருகன் பாய்ந்த அசுரன் மாய்ந்திடுமாறு ஓர் விளையாடல் செய்தான். உடனே அண்டகடாகம் சாய்ந்ததுபோல அலறி இடும்பன் தரையில் சாய்ந்தான். இவ்வொலி கேட்டதும் இடும்பி ஓட்டமாய் ஓடிவந்தாள். விழியைத் திறந்தும், மூக்கில் கைவைத்தும், உடலைப் புரட்டியும் பார்த்தாள். இறந்தானென் றறிந்து ஓலமிட்டழுதாள். அவள் கண்களுக்கு எதிரில் குமாரவடிவேலர் காட்சியானர். உடனே இடும்பி அப்பெருமான் திருவடி வணங்கி, 'என் ஆண்டவா! அமரர் மனைவியர் கழுத்தில் நூல் வாங்காது வேல்வாங்கிய அண்ணலே! என் தாலி பிச்சைதருக' என வேண்டினள். குகவேளும் அருளினன். இடும்பன் உறங்கி விழித்தாற்போல் எழுந்தான். குராவடியண்ணலைக் கண்டு தன் பிழை பொறுத்தருளுமாறு இறைஞ்சினன். முருகனும், இம்மலை இங்ஙனே மன்னுவதாக. இம்மலையில் நான் விரும்பி இனிதமர்வேன். இங்கு நீயும் என்னுடன் தங்குக. என்னை வணங்குவாரனைவரும் உன்னைப்போல் காவடிகட்டி வழிபடுக. அவர்கள் உன்னையும் வணங்குக. அவர்கள் வேண்டிய அனைத்தும் தவருது நல்குவேன்' என்றருளினன்.

பூதமுதல் நாதவரை பொய்யென்ற மெய்யரெல்லாங்
காதலித்த இன்பக் கடலே பராபரமே.

இதற்குள் பிரமதண்டும் பாம்புகளும் தெரிவிக்கச் செய்தி அறிந்து அங்குவந்த அகத்தியரும், முருகவேளை வணங்கி, 'நீர்எழுந்தருள்வதற்கு இசைந்த இடம் இதுவாகில், மலை இங்கேயே இருக்கட்டும். இடும்பனை ஈர்த்தாண்ட இளம்பூரணனே! உமது பேரருளை என்றும் மறவேன்' எனப்போற்றிச் சென்றார். அன்றுமுதல் பழநிமலை இடும்பனுக்கு உரித்தாய் அவன் திருப்பணி ஏற்றது.

இவ்வதிசயத்தை நமது அருணகிரியார்

'பரகிரி உலாவு செந்தி மலையினுட னேஇடும்பன்
பழநிதனிலே இருந்த—குமரேசா

எனப் பாடிக் களிக்கின்றார். இவ்வாறு இடும்பனை வழிதடுத்த் தடிமைகொண்ட மழவனே குராவடி வேலனாகும். இனி மலைமேல் நிகழ்ந்த ஏனைய அதிசயங்களை வருமிதழில் தருவாம். (தொடரும்)

கதிர்காம யாத்திரை

கி. வா. ஜகந்நாதன்

(332-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கல்யாண மடம்

தெய்வயானைஅம்மை கோயிலுக்கு எதிரே உள்ளதைக் கல்யாணமடம் என்று சொல்கிறார்கள். மாணிக்க கங்கைக் கரையில் சமாதி கொண்டிருக்கும் முத்துலிங்க சுவாமி இந்தியாவிலிருந்து வந்தவர். அவருடைய இயற்பெயர் கல்யாணகிரி என்பது. அவர் இங்கே வந்து தங்கித் தவம் புரிந்தார். அவர் தங்கியிருந்த இடமே கல்யாண மடம் ஆகும்.

அவர் தம்முடைய தவத்தாலும் அன்பினாலும் அங்கே வந்த அடியார்களின் உள்ளத்தைக் கவர்ந்தார். அக்காலத்து அரச

வாக்குமனம் ஒன்றுபட்ட வார்த்தையல்லால் வெவ்வேறுப்
போக்குடைய வார்த்தை பொருந்தேன் பராபரமே.

னுடைய உதவியைப் பெற்றுத் திருக்கோயிலை அவர் செப்பஞ் செய்தார் என்று சொல்வர். இப்போதுள்ள தெய்வயானை அம்மன் கோயிலையும் வள்ளியம்மன் கோயிலையும் இவர்தாம் கட்டுவித்தாராம்.

கல்யாணகிரி ஸ்வாமிகளின் காலத்துக்குப் பிறகு கல்யாண மடத்தில் ஒருவர்பின் ஒருவராக மடாதிபதிகள் வந்து அந்த மடத்தின் ஆட்சியை நடத்தி வந்தனர்கள.

கல்யாணகிரிக்கு அடுத்தபடி இந்தமடத்தில் எழுந்தருளியிருந்தவர் ஜயசிங்ககிரி ஸ்வாமிகள். அவர் காலத்தில் வட இந்தியாவிலிருந்து ஓர் அரசன் கதிர்காம வேலனைத் தரிசிக்கவந்தான். மக்கள் பலர் இந்தத் தலத்திற்கு வந்து வழிபட்டுத் தங்கள் குறைகளெல்லாம் நீங்கப் பெறுகின்றனர் என்பதைக் கேள்வியுற்றே வந்தான். அவனுக்கும் ஒரு பெருங்குறை இருந்தது. மக்கட்பேறு இல்லாமல் வருந்தினன் அவன். கதிர்காமத் தலப் பெருமையைக் கேட்டு இங்கே தன் குறை நீங்கப்பெறலா மென்று வந்தான். இங்கே சிலநாட்கள தங்கி ஜயசிங்ககிரி சுவாமிகளையும் பணிந்தான். "முருகா, உன்னுடைய திருவருளால் எனக்குக் குழந்தை பிறக்குமானல் இந்தத் தலத்தில் உன்னுடைய திருப்பணி செய்வதற்கென்றே விட்டுவிடுகிறேன்" என்று வேண்டிக்கொண்டான். பின்பு தன் ஊருக்குப் போனன்.

அப்பால அவனுக்கு ஒரு பெண் பிறந்தாள. அவளுக்குப் பாலசுந்தரி என்று பெயரிட்டு வளர்த்துவந்தான். அரசனுக்குத் தான்செய்துகொண்ட பிரார்த்தனை மறந்துபோய் விட்டது. ஆயினும் கதிர்காம வேலனுடைய திருவுள்ளம் அப்பெண்மணியைத் தன் திருத்தொண்டில் ஈடுபடுத்த வேண்டுமென்றிருந்தது. ஆதலின் அரசனுடைய கனவிலே முருகன் எழுந்தருளி அவனது பிரார்த்தனையை நிறைவேற்றும்படி பணித்தான். செய்துகொண்ட வேண்டுதலையை நிறைவேற்றுவிட்டால தீங்கு உண்டாகும் என்பதையும் அரசன் உணர்ந்தான். இறைவன் கட்டளைப்படியே தன் அழகிய பெண்ணைச் சிலதோழிகளையும் துணையாகக் கூட்டிக் கதிர்காமத்துக்கு அனுப்பினன். அதுமுதல் பாலசுந்தரி

வண்மையின்றி எல்லாம் மதித்துணர்வாய்க் காகெடுவேன்
தண்மையொன்றுந் தோயாத் தடையோ பராபரமே.

கதிர்காம முருகனுடைய திருக்கோயில் தொண்டு செய்துகொண்டு வாழ்ந்து வரலானாள்.

கண்டியில் இருந்து அரசாண்ட விக்கிரம ராஜசிங்கன் என்னும் அரசன் ஒருமுறை கதிர்காமத்துக்கு வந்தான். வடிவேற் பெருமானைத் தரிசித்தான். திருக்கோயிலில் தொண்டுபூண்டு நிற்கும் பாலசுந்தரியின் அழகுருவம் அவன் கண்ணிலும் கருத்திலும் பதிந்தது. அவளைப்பற்றிய செய்திகளை விசாரித்து அறிந்து கொண்டான். அரச குலத்தில் பிறந்தவள் என்று தெரிந்தபோது அவனுக்கு அவளைத் தன் மனைவியாக்கிக் கொள்ளவேண்டுமென்ற விருப்பம் உண்டாயிற்று. "அரசருக்கு மகளாகப் பிறந்து அரண்மனையில் வளர்ந்த இந்த அழகிக்கு இந்தக் கோயிலில் துறவியைப் போல இருந்து வாழ்வது ஏற்றதல்ல. என்னுடைய அரண்மனை அந்தப்புரத்தை அலங்கரிக்கும் அற்புத மாணிக்கமாக இவள் விளங்குவாள்" என்று அவன் எண்ணினான்.

கண்டிக்குச் சென்றபிறகு நல்ல பரிசில்களுடன் சிலரை அனுப்பிப் பாலசுந்தரியிடம் தன் கருத்தைக் குறிப்பாகத் தெரிவிக்கச் சொன்னான். அவர்கள் வந்து அப்படியே செய்தார்கள். "எங்கள் நாட்டில் அரசகுமாரர்களுக்குப் பஞ்சமில்லை. நான் அரசியாக வேண்டுமானால் எத்தனையோபேர் காத்திருக்கிறார்கள். அதனால் என்னபயன்? நான் இங்கே குமாரனுடைய அருள் ராஜ்யத்திலே வாழ்கிறேன். இதைவிட இன்பம்தரும் நிலை வேறு என்ன இருக்கிறது?" என்று அவள் கூறினாள்.

வந்தவர்கள், "இந்தக் கோயிலுக்கு அடிக்கடி வந்து தரிசித்துக் கொள்ளலாம். எங்கள் மன்னர் திருவுளங் கொண்டால் இந்த ஊரிலேயே ஓர் அரண்மனையை வகுத்து உங்களை அதில் இருக்கும்படி செய்வார்" என்றார்கள்.

பாலசுந்தரி இணங்கவில்லை. கதிர்காம நாதனுடைய திருவடிக் கமலங்களிலே படிந்த வண்டுபோல இருந்தது அவளுடைய மனம். அதை மாற்றுவது எளிதான செயலா?

பத்தர்சித்தர் வாழி பரிபக்குவர்கள் வாழிசெங்கோல்
வைத்தவர்கள் வாழிகுரு வாழி பராபரமே.

விக்கிரம ராஜசிங்கன் விருப்பம் நிறைவேறாமற் போகவே அவன் வேறுவகையில் பாலசுந்தரியைக் கைப்பற்றி வர ஏற்பாடு செய்தான். சில படைவீரர்களைக் கதிர்காமத்துக்கு அனுப்பிப் பாலசுந்தரியைக் கொண்டுவரும்படி பணித்தான்.

இறைவன் அருட்பலத்தைப் பெற்ற பாலசுந்தரிக்கு முன் அந்தப் படைப்பலம் என்ன செய்யும்? வீரர்கள் வந்து மிரட்டினார்கள்; தூக்கிக் கொண்டு போவதாக அச்சுறுத்தினார்கள். பாலசுந்தரி சிறிதும் அஞ்சவில்லை. தரிசனத்துக்காக வந்த பக்தர்கள் அப்பெருமாட்டிக்கு உரிய பாதுகாப்பை அளிக்க முன்வந்தனர். ஜயசிங்ககிரி சுவாமிகளும் உதவிசெய்ய நின்றார். வந்த படைவீரர்கள் இங்கே உள்ள மக்களின் எதிர்ப்பைக் கண்டு மீண்டும் கண்டிக்கே போய்விட்டார்கள். பாலசுந்தரி எட்டாப்பழம் என்பதை அரசன் அறிந்து அவளுக்காகக் கோட்டாவி விடுவதை நிறுத்திக்கொண்டான்.

பாலசுந்தரி பல ஆண்டுகள கதிர்காமத்திலே இருந்து தொண்டாற்றினாள். தொண்டுகிழவி யாகும்வரையில் தொண்டுபுரியும் பேறு அவளுக்குக் கிடைத்தது. பிறகு இறைவன் திருவடியிலே கலந்தாள். 19 - ஆம் நூற்றூண்டின் இறுதிப்பகுதியில் பாலசுந்தரியின் மறைவு நேர்ந்ததென்று சொல்வார்கள், 'இவளை எங்ஙன மாயினும் இசையச் செய்தல் வேண்டுமெனக் கருதிய அரசன், அரண்மனைக்கு இவளை அழைத்துவரும்படி தனது படைவீரரை அனுப்பினான். என் செய்வாள பாவம்! திக்கற்றவர்க்குத் தெய்வமன்றோ துணை? அடியாரிடத்து அஞ்சுமுகம் தோன்றினால் ஆறுமுகம் தோன்றாதிருக்குமா? இங்ஙனம் கட்டளையிட்ட அரசனையே இவளுடைய பழி சூழ்ந்தமையால் ஆங்கில அரசினர் அவனைச் சிறைப்படுத்தினர். முருகன் திருவருளால் தப்பிய அரசகுமாரி கிழவிப்பருவம் வரையும் இருந்து தொண்டாற்றி, கி. பி. 1876 - ஆம் ஆண்டளவில் இறைவன் திருவடி நீழலை அடைந்தனள் ....இவ்வம்மையாருடைய சமாதி, கல்யாண மடத்துக்கு அருகில் உள்ள தோட்டத்தில் பால்குடி பாபாவி

கல்லாதேன் ஆனாலுங் கற்றுணர்ந்த மெய்யடியார்
சொல்லாலே நின்னைத் தொடர்ந்தேன் பராபரமே.

னுடைய சமாதிக்கு அருகில் உள்ளது' என்று குலசபாநாதன் தாம் எழுதிய "கதிர் காமம்" என்ற புத்தகத்தில் எழுதியிருக்கிறார்.

★

கஜபுரி சுவாமிகள் என்ற அன்பர் இளமைப் பருவத்திலே வடநாட்டிலிருந்து இங்கே வந்தார். கதிர்காமநாதனைக் கண்டு காதல்மீதூர்ந்து இங்கே தங்கினார். கல்யாண மடத்தில் இருந்தார். பிறகு தனியே இருந்து தவம்புரிய வேண்டும் என்ற விருப்பம் அவருக்கு எழுந்தது. அவ்வாறே அவர் காட்டுக்குள் சென்று தவம் புரியத் தொடங்கினார். ஒரு வருஷம் இரண்டு வருஷம் அல்ல; 50 ஆண்டுகள் தவம் புரிந்தார்.

அப்போது காஷ்மீரத்திலிருந்து ஒரு துறவி தென்னாட்டுத் தல தரிசனத்துக்காகப் புறப்பட்டார். சுரராஜபுரி என்பது அவருடைய பெயர். அவர் இராமேசுவரம் சென்றார். அப்போது அவருடைய கனவில் இறைவன் எழுந்தருளி, "இலங்கையில் உள்ள சிவனடிபாத மலைக்கு வரவேண்டும்" என்று கட்டளையிட்டான். அப்படியே அந்தத் துறவி சிவனடிபாத மென்னும் சமனொளிபாத மலையை அடைந்தார். அது எல்லாச் சமயத்தினரும் வழிபடும் புண்ணியத் தலம்.

அங்கே சிலநாள் தங்கியிருந்தபோது மீட்டும் அவருக்குக் கனவின்மூலம் இறைவன் கட்டளை ஒன்று பிறந்தது. பலகாலமாகக் காட்டிலிருந்து தவம்புரிந்துவரும் கஜபுரிசுவாமிகளைக் கண்டு கதிர்காமத்துக்கு அழைத்துச் செல்லவேண்டு மென்பதே அந்தக் கட்டளை. சுரராஜபுரி முனிவர் காட்டுக்குள் சென்று தேடினார். ஐம்பது ஆண்டுகளாகப் பொறிபுலன்களை அடக்கித் தவம்புரிந்து வந்த கஜபுரியை அவர் தரிசித்தார். காலில்விழுந்து பணிந்தார். கண்ணீர்வார நின்று துதித்தார். இறைவன் இட்ட கட்டளையைத் தெரிவித்தார். மீண்டும் மக்கள் நடமாடும் இடத்திலே வந்து வாழ்வதைக் கஜபுரி சுவாமிகள் விரும்பவில்லை. ஆயினும் இறைவ

சொல்லிறப்பச் சற்குருவாய்த் தோன்றிச் சுகங்கொடுத்த
நல்லவர்க்கே கொத்தடிமை நான்காண் பராபரமே.

னுடைய ஆணையை மறுக்க வகையின்றி அவர் சுராராஜபுரியுடன் கதிர்காமத்தை நோக்கிப் புறப்பட்டார்.

கதிர்காமத்தில்- கல்யாணமடத்தில் வந்து தங்கினார். அந்த மடத்தின் பெருமை அவரால் அதிகமாயிற்று. பலகாலமாகக் காட்டுக் கனிகளையும் கிழங்குகளையும் உண்டுப்பழகிய அவருக்கு அரிசிச்சோறு ஒத்துக்கொள்ளவில்லை. ஆதலினால் பால்மாத்திரம் உண்டுவந்தார். அதனால் அவரை யாரும் **பால்குடிபாபா** என்று அழைக்கத் தொடங்கினர்.

சுராராஜபுரியும் பால்குடிபாபாவுடன் கல்யாணமடத்திலேதங்கி விட்டார். பலஜனங்கள் பால்குடிபாபாவைத் தரிசித்து நன்மை அடைந்தனர். சிலசமயங்களில் அவர் கர்ட்டுக்குச் சென்று சில காலம் இருந்துவிட்டு வருவார். கடைசியில் 1898 - ஆம் வருஷம் அவர் கொழும்பு நகரம் போயிருந்தார். அங்கேயே அவர் இறைவன் அடிநிழலை எய்தினார். அங்கிருந்து அவருடைய திருமேனியை எடுத்துவந்து கதிர்காமத்தில் சமாதி செய்தார்கள். பால்குடிபாபா சமாதிக்கு இன்றும் பூஜை முதலியன நடைபெற்று வருகின்றன.

அவருக்குப்பின் கல்யாணடமடத்தில் பல துறவிகள் தலைமை பூண்டனர். இப்போது மலையாளத்திலிருந்து வந்த ஒருவர் மட்டாதிபதியாக இருப்பதாகத் தெரிகிறது.

வடபழநி யாண்டவர் பாமாலை

திருவொற்றியூர் புராணிகர் T. துரைசாமிபிள்ளை இயற்றியது

360-ஆம் பக்கத் தொடர்ச்சி

மாறான நெறியனைத் தும்மாய்த்து மண்மேல்
சாறான சமயமெலாஞ் சார்பி னுய்ய
ஈறான சிவசமய மெங்கு மோங்க
ஆறான நிலையருடி வடபழனி யாண்டவனே 16

வையமெலாந் தழைக்க வைவேலைக் கொண்டு
தையலா ரிருமருங்குஞ் சாரவருஞ் சூரர்
பையளவும் நினைவார்முற் பரிந்துவருஞ் சீலா
மையலகல் வழிபுரிதி வடபழனி ஆண்டவனே 17

மன்னுசிவ மாதேவன் மகிழவரும் மாமணியே
வன்னிவளர் கும்பனுக்கு வாழ்வருளுஞ் சீலா
இன்னல்தரு சூரர்த மிடும்பை தடிந்தோனே
அன்னையென வெமக்கருடி வடபழனி யாண்டவனே 18

கேளார்கள் நின்புகழை கீழ்நடையா ரிவ்வுலகிற்
வாளா விருந்தே வருந்துவார் ஓலமென
தாளகத்தால் தொழுவார்கள் தண்ணளிபெற் றுய்வாரால்
மாளாதார் வாழ்கின்ற வடபழனி யாண்டவனே 19

சொல்லார் மலர்மாலை தோள்கொண்ட தூயவனே
எல்லா வினையறுக்கு மெழில்மிக்க ஐயாவோ
பொல்லா வினைகொண்ட புலையனெனைக் காவாய்
வல்லார்கள் வாழ்த்தும் வடபழனி யாண்டவனே 20

உனக்கே விழைவுகொண் டோலமிட் டுலருகின்ற
எனக்கே நின்னருளை யென்றியங்கச் செய்வாய்நீ
புனக்கேழ் வள்ளியரைப் புணர்ந்தாளும் புண்ணியனே
மனக்கேத மாற்றும் வடபழனி யாண்டவனே 21

கண்மூன் றுறுஞ்செங் கரும்பேயென் கட்டிமுத்தே
மண்மூன் றுலகும் வழுத்தும் மணிக்குன்றே
திண்மூன் றறுமூன்று புயங்கொண்ட செவ்வேளே
விண்மூன் றுடலழிக்கும வடபழனி யாண்டவனே 22

பொன்னூர் உலகுதரும் பூவயனும் புகழ்மணியே
உன்னு துறைதருமவ் உயிர்தோ றொளித்தோனே
மன்னு நின்பொற்றாளை வாழ்த்த வருடருவாய்
வன்னுவும் வாழ்த்திநெகிழ் வடபழனி யாண்டவனே 23

பண்ணார்ந்த மொழிபகரும் பார்ப்பதி தன்மதலாய்
மண்ணார்ந்த நட்பை மதியாம லென்ஞான்றுந்
தண்ணார்ந்த நிற்றாளை தலைக்கணியாக் கண்டுநிதம்
அண்ணார்ந் திறைஞ்சவருள் வடபழனி யாண்டவனே 24

சேல்கொண்ட விழியார்கள் பாங்கிலுறுஞ் செவ்வேளே
மேல்கொண்ட வினைவிளிக்கும் மிளிர்சேவற்கொடியோனே
கால்கொண்ட வீரக் கழல்காணக் கண்ணருள்செய்
பால்கொண்ட வேலுடையாய் வடபழனி யாண்டவனே 25

தஞ்சமென்ற வடியவர்பால் தயைமிகுந்த தார்மார்பா
துஞ்சவுணச் சூர்தடிந்த சாட்குணய தூயவனே
செஞ்சரணச் சேவடியை சிந்தைதனிற் கொள்ளவருள்
வஞ்சமிலார் வாழும் வடபழனி யாண்டவனே 26

நிதியை நினைந்துன்னித் தாம்மறந்தார் நீர்மையிலார்
கதியை யிழந்துவக்கும் கயவர்பாற் சாராதே
சதியென யான் பாவித்தேன் சார்பிலுள நீபதியாம்
மதியிதனை யென்றுமருள் வடபழனி யாண்டவனே 27

தேனூர் மொழியார்தந் திகைப்பழிந்த செம்மையர்க்கு
தானே அருளலூறும் தட்பத் தயாநிதியே
தானுள நின்பாதம் கண்டேத்துஞ் சாலிநகர்
வானோர் தொழுகிற்கும் வடபழனி யாண்டவனே 28

பொய்யான வஞ்சன்றன் பொல்லாப் பிழைபொறுத்தி
செய்யா யெனிலங்கோ செய்குவதென் ஏழை
மெய்யா வயிலேந்தி மாமயிலி லூர்பவனே
ஐயா வடைந்தேன் வடபழனி யாண்டவனே 29

பிறவா நெறியளிக்கும் பித்தன்றன் பேரொளியே
இறவா வழிபாட்டை யென்றைக்கும் நல்லோர்க்குத்
திறமா யளிக்குந் தெய்வமுதால் நல்லமுதே
மறவா வரமளிக்கும் வடபழனி யாண்டவனே 30

சுபம் ! சுபம் !! சுபம் !!!

மதிநிறைந்த நன்னாள்-திருத்தணி திருப்படி திருவிழா (31-12-1953)

மார்கழி மதிநிறைந்த நன்னாளில் கூடிக்கொண்டாடு திருத்தணி திருப்படித் திருவிழா. இந்த திருவிழா தொண்டர் தம் திருவிழா. அற்புதமாய் கட்டப்பட்டுள்ள படி

களில் தொண்டர் குழாம் குடியேறியது அளவு கடந்த திருப்புகழ் சபைகள் கூடின. வயது முதிர்ந்தவர்கள், சின்னஞ் சிறுமிகள், இசைக் கருவிகளுடனும் கோஷ்டியுடனும் திருப்புகழ் வேத கானம் செய்து கொண்டு தணிகைமலை யேறினர். "படிமீது துதித்துடன் வாழ அருள்வேளே" என்று பாடிய அருணகிரியார் திருப்புகழ் வாக்யம் நிஜப்பட்டது. படிக்குப் படி வழக்கம் போல் கற்பூர ஜோதி ஏத்தி தொழுது மலை யேறி கடைசியில் ஓங்கார உருவாக ஏற்படுத்திய ஜோதி தரிசனம் செய்துகொண்டு அன்பர் கூட்டத்தினர் எங்கும் முருகனையே கண்டனர்.

அநேக சத்திரங்களில் தொண்டர்களுக்கு உணவு வழங்கப்பட்டது. 31-12-1952 புதன் கிழமை காலை 6 மணிக்கு சென்னையிலிருந்து முப்பது அடியார்கள் ஓர் மோட்டார் பஸ் ஊர்தியை ஏற்படுத்திக் கொண்டு, திருவான்மியூர், திருப்போரூர், திருக்கழுக்குன்றம், காஞ்சிபுரம், குமரகோட்டம் முதலிய தலங்களில் திருப்புகழ் பஜனை நடத்திக்கொண்டு, இரவு திருத்தணிகையையடைந்து, 12 மணிக்கு திருப்புகழ் பஜனையுடன் திருப்படி விழா நடத்தினார்கள்.

இதனால் சென்னைக்கும் திருத்தணிகைக்கும் அருகாமையிலுள்ள சில தலங்களின் அடியார்களும் திருத்தணிகைப்படி விழாவின் அருள் இன்ப உணர்ச்சியை ஓர் அளவுக்குப் பெற்றனர்.

Music, The Medium Of Mukti

There has been no greater exponent of music as a medium of spiritual realisation than Sri Tyagaraja. The saint declared that where music or sangeetam is divorced from bhakti "it is not sanmargam". Music is but a path way. It becomes the path divine where it is imbued with

bhakti. Where it is not so imbued, music is the pathway that leads into distress and distraction. Bhakti may be defined as perseverance in God Faith. Where the mind attunes itself to the author of the universe, in whatever name or form, or even as a formless or nameless entity, the element of bhakti is there. Sanmarga sangeetam elevates the human soul to its inner divine nature and in the joy and attunement of it, the world and its travail slip away from consciousness. The veil that hides the Divine from the human is drawn aside, and the veil that concealed the Lord from the bhakta now excludes from the view the world and the worldly. The bhakta and the Lord are set together face to face. Sangeetam is a wonderful veil by which the fourteen worlds of Puranic denomination can be bundled out of recognition, leaving the bhakta in the cognition of only the Supreme.

Where LAYAM—MANOLAYAM is not the objective, sangeetam fails of its purpose. Beautiful poetry or exquisite speech is not mere mechanical mixture of grammar or diction or prosody. The musician as a ground engineer, as it were, by effort and éxercise, establishes himself in an easy mastery of the grammar of music and its swaras. From ground so prepared, the spirit of sangeetam takes off and happy is he who can roam into the unchartered expanse of inspired imagination, vast as the ocean and boundless as the sky. The earth and the objects of the earth are too material and

transient to be the fit themes of divine music. Misic is SABDA - BRAHMA and hence music is as infinite as the Lord God; it is as sweet, as inspiring, as cosmopolitan as BRAHMAM. Where sangeetam unites with a mind centred on divine worship, you get the quintescence of joy, the ANANDA-ANUBOOTHI of the great saints. Sangeetam becomes bhajan and bhajan becomes sangeetam. Bhajan rather begets sangeetam.

The self-conscious, world minded musician can never take man to the heights of his own spiritual excellence. To hear is as much to elevate as to produce good music. World enjoyment even in respect of music, whether you hear or sing is exhaustion of life energy. It takes you nearer to death. But the peculiar feature of sanmarga sangeetam is that it fills with energy and power, him who sings and him who hears. The Lord lives in the cosmos as SABDA-BRAHMAM. It is sabda that creates and it is sabda that annihilates. SABDA is evolutionary and also involutionary. The creative grace of the Lord that exhibits the panaroma of musical sounds is blown forth from the unitary, all pervading essence which dwells in every being. It is Lord Sri Krishna who blows from within. Acquire wealth to get the joy of gift. Acquire knowledge to get the joy of meditation. Acquire the great art of music to get the joy of unification with God through SABDHA-BRAHMAM. This Sri Thyagaraja did. May his life inspire us to reach God through music.

(***Thiruppugal Mani***)

"ஆக்குவை மாயை யாவும் நொடியினில் அவற்றை மாள
நீக்குவை நீக்க மில்லா நினைப்பொடு மறப்பு மாற்றிப்
போக்கொடு வரவு மின்றிப் புனிதநல் லருளா னந்தந்
தாக்கவுஞ் செய்வா யன்றோ சச்சிதா னந்த வாழ்வே !!

(தாயுமான சுவாமிகள்)

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
நெ. 1506

Rgd. M. No. 5390. Amirthavachani (1953 தை-அமிர்தவசனி)

அடர்ந்த அழகிய கூந்தலை அடைய
காஷ்மீர் குஸும்
எண்ணெயுடன் கலந்துகொள்க.
சரும உபாதைகளுக்கு
ஸான்டலக்ஸ்
திப்புண், சிரங்கு, சொறி, படை, காயங்களுக்கு.
M. R. ஜெட்டப்பாவின்
பிரேமலீலா
சிறந்த மைசூர் ஊதுவத்திகள்.

குழந்தைகளுக்கு
நம்பிக்கைபெற்ற
நஞ்சன்கூடு மருந்துகள்
காஸ்மஸ்
கஸ்தூரி மாத்திரை
கர்ஜன்
கோரோஜனை மாத்திரை
பாலக்ஸ்
பேதியாக மாத்திரை
நஞ்சன்கூடு பல்பொடி
நீ வ. மெடிகேடட் · பல் உபாதைகளைத்தடுக்க.

பல் உபாதைகளைத் தடுக்கவும், குணப்படுத்தவும்
நஞ்சன்கூடு-பல்பொடி
நீ வ. மெடிகேடட்
டப்பி அணு 8. பவுண்டு ரூ 6-8-0
நம்பிக்கை பெற்ற நஞ்சன்கூடு மருந்துகள்

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள் நன்மதிப்புபெற்ற
நகை வியாபாரிகள்
"ஸ்வர்ண மாளிகை"
A. S. S. M. சோமசுந்தர செட்டியார் & Co.,
தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்
124, தெற்காவணி மூல வீதி - மதுரை.
Tel :—"FAITH" Estd :—1924 Phone :—118

வியாபாரக்குறி
N. K. M.
தங்கநாடா
நம் நாட்டுத் தொழில்களில்
சிறப்புவாய்ந்த கைத்தறியால்
சிறந்த நூதன முறைகளில்
தயாரிக்கப்பட்ட
பட்டு, நூல் ஜவுளிகளுக்கு
நம்பிக்கையான இடம்.



கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
மொத்தம் அண்டு சில்லரை வியாபாரம்,
53, கிடங்குத் தெரு, மதராஸ் 1.

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18